Q22:4:7
183012

4

407

ஸ்ரீ

ஸ்ரீ மதே ராமானுஜாய நம:
ஸ்ரீ மத்யை கோதாயை நம:

JAN 1923



# ஸ்ரீ கோதாகீர்த்தனமஞ்சரி கும்மி

இஃது

மென்னடையன்னம் பரந்துவிளையாடு வில்லிபுத்தூ
ரென்கிற ஸ்ரீவில்லிபுத்தூரில் நித்ய வாசஞ்செய்யும்
ஸ்ரீ உ. வே. ஸ்ரீமான் திருமலை நல்லான் சக்கர
வர்த்தி சுவாமி திருவம்ஸத்தரான

## திருவேங்கடம் அய்யங்கார் சுவாமி

திருவாய்மலர்ந்தருளியதை

சுரக்ஞான ஸங்கீத வித்வசிரோன்மணிகளால் பார்வை
யிட்டு இப்போது நடையாடுகிற நூதன மெட்டு
களமைந்த ஸ்ரீ கோதாகீர்த்தனமஞ்சரி
கும்மிகள் ஸ்ரீ வில்லிபுத்தூர்
வடக்கு ரதவீதி மடம்

**வ. ஸ்ரீநிவாசய்யங்கார்**

முயற்சியால் வெளியிடப்பட்டு

பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

---

1922 அணா 8

Q22:417
M22
183512

ஸ்ரீ

ஸ்ரீ மதே ராமாநுஜாய நமக

ஸ்ரீ மத்யை கோதாயை நமக



# ஸ்ரீ கோதாகீர்த்தனமஞ்சரி கும்மி

இஃது

மென்னடையன்னம் பரந்துவிளையாடு வில்லிபுத்தூ
ரென்கிற ஸ்ரீவில்லிபுத்தூரில் நித்ய வாசஞ்செய்யும்
ஸ்ரீ உ. வே. ஸ்ரீமான் திருமலை நல்லான் சக்கர
வர்த்தி சுவாமி திருவம்ஸத்தரான

திருவேங்கடம் அய்யங்கா சுவாமி

திருவாய்மலர்ந்தருளியதை

சுரக்ஞான ஸங்கீத வித்வசிரோன்மணிகளால் பார்வை
யிட்டு இப்போது நடையாடுகிற நூதன மெட்டு
களமைந்த ஸ்ரீ கோதாகீர்த்தனமஞ்சரி
கும்மிகள் ஸ்ரீ வில்லிபுத்தூர்
வடக்கு ரதவீதி மடம்

வ. ஸ்ரீநிவாசய்யங்கார்

முயற்சியால் வெளியிடப்பட்டு


பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1922

இதன் விலை அணா 8

22 JAN 1923

ஸ்ரீ



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# ஸ்ரீகோதாகீர்த்தனமஞ்சரி

## நம்மாழ்வார் விஷயம்

[பொத்தாய இக்காலூரா என்பதுபோல]

பல்லவி.

மாறனடியை வணங்காய் மனமே நீ
மாறனடியை வணங்காய்.

அநுபல்லவி.

கூறுமென் சொல்லை நன்று குறிப்பிதுவே என்று
தேறிநன் மகிழ்வாக வினைபோக (மா)

சரணங்கள்.

அங்குமிங்குமோடி யலைந்தலைந்து வாடிச்
சங்கைகொண் டுலையாதே மலையாதே (மா)
தென்குருகூர் நம்பி தெய்வமென்றேநம்பி
நன்கு கவிகள்பாடி யெழுந்தாடி (மா)
திருச்சங் கணித்துறைவன் சிந்தையில் வந்துறைவன்
வருத்தமுனக்கில்லையே கேளென் சொல்லையே (மா)
நாடுபுகழு மையன் ஞானமுத்திரைக்கையன்
ஓடி யிங்கேவருவா னருடருவான் (மா)

சூடிக்கொடுத்தமாது சுடரடியை இப்போது
நாடி யவள்சரிதம் புகலநிதம் (மா)

---

## இராமாநுஜர் விஷயம்.

(இகயாலனே வானி தோனு—என்பதுபோல)

பியாரிதஜோரி

பல்லவி.

எதிராஜனேயெனுதிதேவ ஏழையைக்கண்பார்வாவா [எதி]

அநுபல்லவி

சதிருள்ளபூதபுரி தங்குமெங்கள் துங்கனே [எதி]

சரணங்கள்.

குணநிதியேயருள்புரிவாய் கோதைகாதையோதவே [எதி]
கூரேசன்பணிபாதா கோதிலாதநீதனே [எதி]
வல்வினையைத்தீர்த்தருள்வாய் மாதுகோதைசோதரா [எதி]
மகிழ்மாறன் பொன்னடியாய் வந்தசொந்தபந்துவே [எதி]

---

## மணவாளமாமுனிகள் விஷயம்.

[அவனிடத்திலுனக் கென்னடிபேச்சு என்பதுபோல]

ஹமமந்தாமஹ பலா

பல்லவி.

வந்தருள்மணவாள மாமுனியே—யுன்றன்
மலரடியல்லவோ எங்களுக்குச்சொந்தம் [வந்]

அநுபல்லவி.

அந்தமில்பேரின்ப வடியவர்கோமான்
அணையெனவுகந்தவ வனந்தநன்நாமா
இந்தவுலகிலவ தரித்தருணோமா
இத்தனைதாமதம் நீ செய்யலாமா [வந்]

சரணங்கள்.

அட்டகசங்களென்ற ஆரியர்கூடி
அதுலகல்யாணகுணம் அனைத்தையும் பாடி
இட்டமுடனே பணிந் தேத்திடநாடி
இருக்குநின்பதந்தொழும் என்முன்னேயோடி [வந்]

நாடுபுகழும்பொன்னி நடுவிலமர்ந்த
நாகணையிற்றுயிலும் அரங்கர்க்குமுந்த
ஈடுமுப்பத்தாறு யிரப்பொருள்தந்த
இகபரவாரியா என்றன்மனம்பொருந்த [வந்]

தீனஜனரக்ஷகா பாவனதேக
ஸ்ரீசைலேசதயா பாத்திரமாக
மானிலத்துதித்தவா வரகுணயோக
வல்வினைதீர்க்கவே சீக்கிரமாக [வந்

## ஸ்வாச்சாரியர் விஷயம்

[நம்பினேனுன் சேவடியை நம்பினேன் சாமி என்பதுபோல]

பல்லவி

நல்லவரந்தந்தருளுவாய் நம்பினேனுனே

அனுபல்லவி

தொல்லுலகுதன்னிலுள்ள தூயவர்கள் புகழ்நாதா [நல்]

சரணங்கள்

மதுரகவிராமாநுஜ வாமுனியென்றநற்போர
இதரமதவாதிகளை யெதிர்த்துவெல்லுஞ்செயதீரா [நல்]

பண்டுநம்பிடத்திலிவன் பஞ்சசம்ஸ்காரங்கள்பெற்றுத்
தொண்டுசெய்யுந்தொண்டனென்று-தொல்லருள்செய்ய
கிருபையுற்று [நல்]

சிஷ்டஜனர்போற்றும்பாதா தீனஜனபரிபாலா
பட்டர்பிரான்மாமுனிவன் பதம்பணியுங்குணசீலா [நல்]
மார்கழிபிற்கார்த்திகைநாள் வந்தவதரித்தநீதா
சீர்திகழ்கலியன்முனி சிந்தைபுகழும்விநோதா [நல்]

அரங்கநகரப்பன்றுளில் அனுதினமும்பணிவோனே
நிரைகொளச்சொல்கோதை காதைச்-செந்தமிழ் தழைக்கத்
தானே [நல்]

## திருமலைநல்லான் சக்கிரவர்த்திகள் விஷயம்

இராகம் கலியாணி தாளம் ஆதி

### லாவணி.

சீலம்பிரி

### கண்ணிகள்.

மாதவன்றிருவருள் வடிவுகொண்டதுபோ ல
வந்தவதரித்திடும் ஐயா
நாதமுனியுடைய மலரடியை வணங் கி
ஞானம் வளர்த்தவெங்கள் மெய்யா (க)

நதியில் வந்திடும் ஞானியுடலைப் பள்ளிபடுத் து
நல்லானெனப்பேர்பெற்ற நேமா
ததியிதென்றுமாலாழி தன்னைப்பூசித்துப்பெற் ற
சக்ரவர்த்தியென்ற நன்நாமா. (உ)

நல்லானெனுங்காளமேகம் ஞானமழை யை
நடுக்காட்டிற் பெய்ததென்று நன்றாய்
எல்லாருங்கேட்க உடையவராற் சொல்லப்பெற்ற வா
இதாமதங்களை வென்றாய் (ங)

திருப்பதிதன்னிலே யெழுந்தருளியிருந் த
திருமலைநல்லானென்ற ஸ்வாமி
கருத்திலுறையுமுன்றன். பொறுமைக்கொப்பாகு மோ
கனைகடல் சூழிந்தப் பூமி (ச)

மணவாள மாமுனிமலரடிகள் சிரத்தி ல்
வைத்து மனமகிழ்ந்த கோனே
குணவாளனேயுனைவணங்கிக் கீர்த்தனங்களாய்க்
கோதைசரிதஞ் சொல்வேன் நானே. (ரு)

---

## கோஷ்டிவணக்கம்

### நாமாவளி

தப்பேறுமாடித்சேனே

### பல்லவி

ராமாநுஜதாசன் அடியேன் ராமாநுஜதாசன்

அநுபல்லவி

தாமதகுணங்களைத் தவிர்த்துப் பதின்மர்புகழ்
சத்வகுணமுடைய சாதுபுருடர்காள் (ராமாநுஜதாசன்)

சரணங்கள்

கோதைசரிதத்தைக் கீர்த்தனமாகக்
கூறுவனிதிலுள்ள குற்றங்கள் பொறுப்பீர். [ராமா]

உடையவரடிகளில் உறவுடையவர்கள்
கடிமலருமதடி கருத்தினில் மறவேன். [ராமா]

சேயின்மழலைமொழி சிந்தையிலுவக்குந்
தாயெனவென்றமிழ் சந்ததம்புகழ்வீர். [ராமாநுஜ]

---

கொட்டு

ஆரியன் திருவடி தாருவின் நிழலடி
கார்முகில் சுழலடி கைதொழுதேன் சீரடி. க

எட்டெழுத்தின் உள்பொருள் எடுத்துரைக்கும் சொல்பொருள்
கற்பகக் கரப்பொருள் கலியனென்னும் நல்பொருள். உ

பூதலத்தில் ஏகியே புகழ்கலியனாகியே
பூப்ரதக்ஷணமாகியே புண்ணியதீர்த்த மாடியே. ௩

நாரணன் திருவடி நாடி பணிந்தேத்திய
நாதன் கலிகன்னி புகழ் நாவினாலுரைத்திட. ச

அண்டர்தொழும் பாதனே ஆனந்த சொரூபனே
தண்டாமரை தாளனே தயவருள வேணுமே. ரு

ஸ்ரீ



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பெரியாழ்வார் அவதரித்துக் கைங்கரியம் செய்தல்

விருத்தம்.

சீரணிவளஞ்சேர் புதுவைவாழ் முகுந்தன்
செழுமறை வேதியர் குலத்தோன்
ஏரணி புதல்வ னாகவே மிதுனத்
தெழில்பெறு சோதிநா ளன்னிற்
றாரணிபுகழ விந்தையின் சிறுவன்
றானென வுலகினி லுதித்தோன்
காரணிகுழலார் மாயையைக் கடந்தோன்
மகிமையை யார்கொலோ கருதார்.

விருத்தம்

பாமவயிணவனனசுகனிலுமே நான்மடங்கு பத்திகொண்ட[பாரிற்
திருவுளஞ்சேர்பட்டர்பிராணித்தருடன்முத்தருக்குந்நிரைசூழ்
கருவளருஞ் சேதனர்க்கு மாலடிமைசெய்யுமதே கடமையென்று
திருவளருமணிமார்பன் சேவடியி லடிமைநிதஞ் செய்குவானே.

(தெண்டனிட்டாளென்று சொல்லடி என்றன் சாமியை என்பதுபோல)

மிலஹரி ஆதிதாளம்

பல்லவி

சித்தமு வந்தடிமைசெய்தான் புதுவையமர்
நித்தருமுத்தருந்தொழும் நத்தணிகரத்தருக்குச் (சித்தம்)

அநுபல்லவி.

எத்தருமத்திலுமிது உத்தமமென்றுன்னிக்குருக்
கத்திபுன்னை செங்கழுநீர் வைததுவளர்த்துத்தினமும்
புத்தமுதமகாந்த மொத்தமொழிவிரசையோ
டெத்தலத்தோரும்புகழப் பக்தியுடனச்சுதர்க்குச் (சித்தம்)

சரணங்கள்

மல்லிகை மருக்கொழுந்து முல்லை செவந்தியலரி
அல்லிவகுளங்குவளை பல்லவங்கள் தழைக்கின்ற
குல்லையுடன் வனசமுஞ் சொல்லரிய செண்பகங்கள்
நல்லவிதமாய்வளர்ந்து வில்லிபுத்தூருறைவார்க்குச் (சித்தம்)

வேலியிட்டு நீரிறைத்துக் கோலிவளர்த்து மலர்கள்
சாலவெடுத்துச் சரங்கள் மாலைகட்டியுந் தொடுத்தும்
சீலமுடனித்தமனு கூலம்நமக்கிதுவென்று
நீலமலைமேனிகொண்ட ஆலிலைச்சயனருக்குச் (சித்தம்

மட்டுவளர்சோலையினில் வட்டவடிவானதடம்
இட்டதிற் பங்கயக்கொடி விட்டுவளர்த்து மிகவும்
இட்டமுடன் பூவெடுத்துக் கட்டிவைத்துமாலைபல
பட்டர்பிரான் பத்தியுடன் எட்டெழுத்துகந்தவர்க்குச் (சித்தம்)

---

## திருப்பணிசெய்தல்

விருத்தம்

தேன்மொழித் திருவார் மதுரையிற் சென்று
சிறப்புடன் பாண்டியன் சபையில்
நான்மறைப் பொருளாம் விண்டுவின் மதத்தை
நாட்டியே பொற்கிழி யறுத்து
மான்மதக் குழலார் விரசையினண்பன்
வயிணவர் பற்பலர் சூழ,
வான்மதி தவழு மாளிகைப் புதுவை
மாநகர் தனை யடைந்தனனே,

விருத்தம்

பழிப்படையாப் புகழ்படைத்த பாண்டிய ராசன் கொடுக்கக்
கொழுப்புடைய வாதிகளின் குலத்தை வென்று கொண்டுவந்த
கிழிப் பணத்தாற் பட்டர்பிரான் கிளர்பணப்பாம் பணையார்க்குச்
செழிப்புடைய புதுவையினிற் றிருப்பணிகள் செய்தனனே.

(சங்கீத ராமாயணம் கல்யாணபேரிகை அடித்தார் என்பதுபோல)
மார்களிமாஸம் திருவாதரைநாள்

கண்ணிகள்

மாதவன் கோயிலை நண்ணினர் பணி
வகைவகையாய்ச் செய்யவெண்ணின ர்
நீதிநன்னூல்களைப் பார்த்தார் வெகு
நேர்த்தியா யாட்களைச் சேர்த்தா ர். [க]

மெத்தநன்றாய் வானம்வெட்டினர் அதில்
மின்னார் தடமதில் கட்டின ர்
உத்தமத் தூண்களை நாட்டினர் நன்
குயர்ந்தகற்போதிகை பூட்டின ர். [உ]

மண்டபங்கள் பலகட்டினர் அதில்
வச்சிரவைடூரிய மொட்டின ர்
கண்டவர்க்கானந்தந் தேக்கினர் மலர்
கட்டியமாலை கடுக்கின ர். [௩]

ஓங்கும்விமானங் களமைத்தார் மிக
உன்னதக்கோபுரம் சமைத்தா ர்
தீங்குவராமலே காத்தார் அந்தச்
சீதரன்நாமங் களார்த்தா ர் [௪]

நந்தவனங் களுண்டாக்கினர் அங்கு
நாடோறுமே சென்றுநோக்கின ர்
மந்தமதிகளைத் திருத்தினர் நல்ல
வைணவரோடு பொருத்தின ர். [௫]

இப்படியாகவே யன்பார் நன்
கிசைந்தவிண்டு சித்தரென்பா ர்
மைப்படிமேனியன் றுளில். நித்தம்
வணங்கிவருகின்ற நாளி ல். [௬]

## ஆண்டாள் அவதரித்தல்

வேளகாதுரா என்றதுபோல
ஜொண்டிச்சிந்து

பல்லவி

அவதரித்தனள் நன்றாய் ஆண்டாள் அவதரித்தனள் —ஆண்ட.

அநுபல்லவி

புவனிநங்கை யென்னுந் தேவியே இந்த
அவனியிலோர் குழந்தையாகவே— நன்றாய் [அவதரித்தனள்]

சரணங்கள்

ஆடித்திருப்பூரந்தன்னிலே நல்லோர்
பார்டிப்புகழ்புதுவை வாழவே—நன்றாய் [அவதரித்தனள்]

எண்டிசைக்கும் நன்மையோங்கவே கூடி
வண்டிசைக்கும் திருத்துழாயிலே-நன்றாய் [அவதரித்தனள்]

பொன்னடியே புருஷகாரமாய் பற்றி
இன்னிலத்தோ ரெவருமுய்யவே — நன்றாய் [அவதரித்தனள்]

---

## வளருதல்

(கரமேஹஜிமிரேநந்தஜிகதாஞ என்பதுபோல)
[மான்கொண்டதோர்]

இராகம் தேசிகதோடி சாப்புதாளம்

பல்லவி

வளர்ந்தாள் மலர்க்கோதை வண்புவியின்மேலே

அநுபல்லவி

தளர்ந்தார்க்குதவுவோர்—சந்தானம்போலே [வளர்ந்தாள்]

சரணங்கள்

நானிலமாதர் நாடோறும் வேத
மோனமுனிவர் புகழோத—தளர்ந்தார்க்கு [வளர்ந்தாள்]

தோழியர்கூடி சொந்தமாய் நாடிச்
சூழவுந்திருமல்லிநாடி—தளர்ந்தார்க்கு [வளர்ந்தாள்]

மாசறுசோதி மணிவண்ணனதி
கேசவன்றெல்புகழோதி—தளர்ந்தார்க்கு [வளர்ந்தாள்]

என்மனமேவி யெனையாளுமாவி
கன்மந்தொலைத்திடும் சஞ்சீவி—தளர்ந்தார்க்கு [வளர்ந்தாள்]

---

## தாலாட்டு

த்வாரகாபுரி பட்டணமாம் சதுரங்கத்தளமேடையம்

சீரார்வளஞ் சேர் திருத்துளவில் வந்துதித்த
காரார் குழற்கோதாய் கண்மணியே தாலேலோ
பலமணிசேர் தொட்டின்மிசைப் பாங்காகக் கண்வளராய்
குலமணியே கோமளமே கொம்பனையாய் தாலேலோ
அரைவடமுங் கிண்கிணியும் அம்பொற் சிலம்புடனே
சிரமிசைச்சுட்டியுந் துலங்குஞ் சேயிழையே தாலேலோ
அந்தமில் சீர்மாயன் அடியார்க்கருள்புரியும்
கந்தமலர் மாதுநிகர் கட்டழகி தாலேலோ
முத்தேமணியே யென் மோகனமே பைங்கிளியே
சற்றே நீ கண்ணுறங்காய் தண்குயிலே தாலேலோ
மங்களஞ் சேர்தோகை மயிலே யென் மாணிக்கமே
எங்கள் குலத்தமுதே ஏந்திழையே தாலேலோ
வானவர்கள் கூடி மகிழுங்குணவதியே
ஞானவடிவே நவநிதியே தாலேலோ
சிந்தாமணியே செழுமறையினுட்பொருளே
நந்தாவிளக்கே யென் நன்மணியே தாலேலோ.

---

## விளையாட்டு

[மானேயங்கே போனவகையென்னடி பொல்லா வம்பனிருக்கிற
செம்பொன் மலைக்குள்ளே மானே என்பது போல.]

காலையில் கண்ணன்

பல்லவி

விளையாடினள் மாமலர்க்கோதை ரத்ந
வேதிகையிற்பல தாதியர் தம்மொடும் [விளையாடினள்]

அநுபல்லவி

வளையாழி தரித்திடுமாதவன்
மாமலர்த்தாள்தொழும்—நேமம்விடாமலே [விளையாடினள்]

சரணங்கள்

பட்டுடுத்துத் திருமேனிக் கழகிய பணிகளும் பூண்டு —நல்ல
பாலனமுண்டனம் போல நடந்துபின் பணிந்து பல்லாண்டு
பட்டர்பிரான்சொல்லப் பின்சொல்லியேகற்றுப்
பத்தரனைவருந் தஞ்செவியாலுற்று
மட்டிலாமற் றுதித்திடவுஞ்சுற்று
வஞ்சியர் கூடியே —கொஞ்சவுமே பெற்று— [விளையாடினள்]

செப்புகழல் பந்துபாவைகளோடுஞ் சிறுசுளகுங்கொண்டு-மிகச்
சின்னஞ்சிறுபெண்கள்சொர்னக்கொடிபோலச் சேரவுமேகண்டு
நுட்பமதாய்ச் சிறு வீடுகளமைத்து
நூதனக்கோலம்வி நோதமாயிழைத்து
ஒப்பில்லாத நல் அன்னங்கள் சமைத்து
உம்பர் பிரானுக்கு—முன்புசமற்பித்து [விளையாடினள்]

கன்னியரைப்பல கோவியர் ரவனைகாட்டிடவேபண்ணி-தன்னைக்
கண்ணனெனும்படி திண்ணமதாகவே கருத்தினிலே யெண்ணி
நன்னயமாய்க் குழல் ஊதியுங் கூடவே
நங்கையர் சென்றுபின் மங்களம் பாடவே
தன்னைப்பணிந்தவர் பாவங்களோடவே
தந்தையுந்தாயும் மகிழ்ந்துகொண்டாடவே [விளையாடினள்]

---

## மாலைதரித்தல்

[சாரசசமமுகபாமவமா என்பதுபோல]

நாராயணவென்ற நாமத்தை

(இராகம் ஆனந்தபைரவி—ஆதி.)

### பல்லவி

மாலையை மருவுகுழலிலணிந்தாள் எங்கள்
வனிதையர் குலமணி [மாலையை]

### அநுபல்லவி

சேலைநிகர்த்தவிழி நூலைநிகர்த்திலகு
சின்னவிடையுடைய—அன்னநடையாள் கோதை [மாலையை]

## சரணங்கள்

[வந்த
வேயர்குலமுனிவன் விரைவுடன் றினந்தின மெடுத்துக் குவித்த
விகசிதமலர்களை மகிழ்வுடன் வகைவகை தொடுத் து
நேயமுடனமைத்து மாயனுக்கென்றுவெகு
நிச்சயஞ் செய்திருக்க—இச்சையதனிலுற்று [மாலையை]

வளமுறுதுளவுடன் பவளமல்லிகை கருநீலஞ் செண்பகம் புன்னை
வகுளம் மருக்கொழுந்து வனசம்முதற்குடசசால ந்
தனமெனமனதினில் நினைவுடனனுதினந்
தந்தைதொடுத்து வைக்கச் சிந்தைகளித்துவந்து [மாலையை]

ஓகையுடனே பல தோகையர் கூந்தலைப்பின்னி யெடுத்துக்கட்ட
உடனொரு நொடியினிற் கடிமிகு துளவுறு கன்னி
வாகையுடைய கரு மேகவண்ணன் களிக்க
வட்டமதிமுகத்துப் பட்டர்பிரான்மகள் [மாலையை]

---

## பெரியாழ்வார் இரங்கல்

### விருத்தம்

தேனூருமலர் சூடித் தன்னழகு
பார்த்துடனே செழித்த மாலை
தானகக் களைந்து மலர்க்கூடையின் முன்
போல்வைத்துத் தையல் தானும்
மானார்களுடனிருக்க விதையறியான்
பட்டர்பிரான் மாலை யெல்லாம்
ஆனதபெருஞ் செல்வத்தா லினிலைச்
சயனருக்கே யனிந்து வந்தான்.

### விருத்தம்

நித்தமுமிப்படி நிகழவோர்தின ம்
உத்தமர்க் கணியவுரோமங்கண்ட தை
மெத்தவுமருச்சகர் வியக்கவேவிண் டு
சித்தனும்வெதும்பியே சிந்தைசெய்குவா ன்

[மாயாகாணிமோசமிபுடு யேமார்ந்துசெலி என்பதுபோல]
அஙகனும்மங்கனு

சூடி—இராகம் ஆதிதாளம்

பல்லவி

எம்மானே நானென்றுமறியேன் என்ன மாயமோ

அநுபல்லவி

உண்மையாகச்சொன்னேன் சாக்ஷி—உன்றன்பாதமே(எம்மானே)

சரணங்கள்

நித்தியமாய்நெஞ்சிற் பத்தியுடனே
சுத்தமலர்களை டுத்ததிநயமாய்
முத்துச்சாம்போல் வைத்திடுமாலையில்
மைத்திடுகேசம் உற்றதே (எம்மானே)

நாடுபுகழ்மறைகள் தேடியபாதா
பாடும்நல்லன்பற்கு வீடருண்நீதா
ஏடலர்தாமரை கூடியமாலையை
நாடியவர்வந்து சூடினர் (எம்மானே)

புதுவைதனில் வாழ் பதுமநாபர்
கதியடியேற்குன் மதுமலர்த்தாளே
சதுமறைகங்கை நதிகமழ்பாதா
இதுவுமின்றென்ன புதுமையோ [எம்மானே]

(கோதை சூடிக்கொடுத்த மாலைகொணர்கெனல்)
(மோகனவல்லி பந்தடித்தனள் முத்துப்பந்தலிலே, என்பதுபோல)
நாரதரும் கூடி வேகாம

பல்லவி

மணமில்லாதமாலையை யிங்கு வந்தணிந்தீரே

அநுபல்லவி

குணமுடையநற் கோதைகுழலிற்
கொண்டார் வண்டார் தண்டாரிருக்க [மனமில்லாத]

சரணங்கள்

உந்தமகத்தில் வளருங்கோதை ஒண்புவிமாதே
சிந்தையிலெம்மைக் கருதுகின்றனள் திண்ணமிப்போதே

சொந்தமாயவள் தரித்ததேப்ரியஞ்
சொன்னோம்-சொன்னோம்-சொன்னோம் மெய்பிது[மணமில்லாத]
கோதைக்கு மால்சூடிக்கொடுத்தாளென்று பேரில்
[பிள்ளையென்றாற் றாப்பில பிள்ளை பிள்ளை என்பதுபோல]
நாடிப்பம் வாடிமானே

பல்லவி

சூடிக்கொடுத்தாளென்ற திருநாமம் சுந்தரிகோதைக்குவாய்த்
தததே

அநுபல்லவி

தேடித்திரிந்து தவம்புரிந்தேத்திலும்
செங்கமலத்துறை மங்கைக்குங்கிடையாத [சூடி]

சரணம்

[வவே
சீலப்பெருங்குணநித்தியமுத்தர்கள் தெண்டனிட்டானந்தமே
சிந்தையி லெண்ணியே இந்திரன் முதலான தேவர்கள் மலர்மழை
மாலுக்குமாமலர் சூடியளிக்கவும் [தூவவே
வாங்கியவன்றரித் தோங்கிக்களிக்கவும் [சூடி]

[ஆண்டாளுக்கும் தோழியர்க்கும் வினு விடை]
இராகம் சங்கராபரணம்—ஆதிதாளம்.
மாதைவ சோதைவ
இந்துஸ்தான் சோடிதாளம்

---

கண்ணிகள்

வேயர்குலத்திலுதித்திடுரத்நவிளக்கெனுங்கோதைநல்லாய்
நேடமுடனுனைக்காப்பவனாரிதைநிச்சயமாகச்சொல்லாய்
ஆதிமுதலெனக்கந்தரங்கமானவாருயிர்த்தோழியர்காள்
தீதில்குணத்தவரென்னை ரட்சிப்பவர் தென்னரங்கப்பெருமாள்.
ஏர்மலிபாரி லுதித்தவளே யெங்க ளெண்ணமதைச்சொல்ல வோ
கார்குழல்மங்கையா தங்களைக்காப்பவர் கைப்பிடித்தோரல்லவோ
அப்படியானாலு மானிடர் தங்களை யகத்தில் நினையே னே
இப்படி தன்னிலே யென்கைபிடிப்பவ னெம்பெருமான்றா னே

மேனகைபோன்ற கருங்குழலா யிது மெய்வசனந்தா னே
மானிடப் பெண்ணுடுங்கூடிக்கலவியை மாதவன் செய்வா னே
கண்டு மொழியுடைப் பாக்கியரேயிந்தக் கட்டுரைதானன் றே
பண்டுபல் கோவிய ரோடுகலந்தவன் பாம்பணையானன் றே

நந்தணிமாயனைக் கூடவென்றாலது நங்கட்கெளிதா மோ
எத்தனை நோன்பவர் செய்தனரோ விதை யாங்களறிவோ மோ
அன்னவர்போலவே நானுமந்நோன்பினை யாற்றுவனீர்பாரீ ர்
என்னுடனே யிந்த நோன்பை யிழைக்க விசைந்து துணைவாரீ ர்

---

## ஆண்டாள் நோன்பு புரிதல்

[மகிஷாசுரமர்த்தினி என்பதுபோல]

இராகம்—ஸஹானு ஆதிதாளம்

கிருஷ்ணனுனந்த முகுந்த என்றமெட்டு

### பல்லவி

புரிந்தாள் மலர்க்கோதை மார்கழி நோன்பு
புரிந்தாள் மலர்க்கோதை

### அநுபல்லவி

நிரந்தரமுலகி லுவந்துகருணைசெய்
நேசனே ஈசனே
பவநாசனே ஸ்வப்ரகாசனே
வரந்தரமனநிலுவந்திடெனவே புரிந்தாள் [மலர்க்கோதை]

### சரணங்கள்

சந்தனச்சோலைகள் செழிக்குமாய்ப்பாடி
தனிலுறையும்பல கோவியர்கூடி
நந்தலில்நோன்புமுன் செய்ததை நாடி
நவமோகனக் கண்ணன் நாமங்கள்பாடி
நாடோறும் மகிழ் வோங்கவே இந்
நாட்டிலுள துயர் நீங்கவே
மூடர்மனதிலும் ஞானந்தேங்க வே
முன்னைவினைகளு மேபின் வாங்கவே (புரிந்தாள் மலர்க்கோதை)

மல்விவளநக ராய்ப்பாடியாய் மன்ன
மால்கோயிலே நந்தன் மாளிகையென முன்ன

அல்லல்தவிர்க்கும்விண்டு வருள் கண்ணனே யென்ன
ஆயிழையாருந்தானு மாச்சியமிரண மின்ன
அன்று பாவனை பணணியே மது
வாருமருமலர்க் கண்ணி யே
துன்றுமணிமுடி மாலை யெண்ணி யே
துக்கசாகரக் கரையை நண்ணியே (புரிந்தாள் மலர்க்கோதை)
சிற்றஞ்சிறுகாலையிற் றோழியர்களை யொன்று
சேர்த்தழைத்துக்கொண்டு திருமுக்குளத்திற் சென்று
சுத்தமுடனே நீராடிநித்தமும் நன்று
துளவணிமாயவன் கோயிலில் வந்து நின்று
தூயவானவாதியே நற்
சுருதிமுடிவளர் சோதி யே
ஏயவிசைபெறு தருமநீதி யே
யென்றுசொல்லித்திருப்பாவை யோதியே (புரிந்தாள் மலர்க்
கோதை)

---

## ஆண்டாள் கனவு கண்டமை யாருயிர்ப் பாங்கிகட்குரைத்தல்

[தூதாக விதிவ்ய பாத— தயா நிதேராமா என்பதுபோல்]
சேவகா மன்னன்

பல்லவி

கேளாய் தோழி யென் கனவைக்
கிட்டவாராய் சொல்வேன் (கேளாய் தோழி)

அநுபல்லவி

நீளாதேவி போலே யின்பம்
நித்யமடை வேனே
வேளாமெனும் வாசுதேவன்
மெள்ள வந்து நின்றான் (கேளாய் தோழி)

சரணங்கள்

வந்த கண்ணன் பந்தலிலே
மந்திரங்கள் சொல்விச்
செந்தாமரைக் கையாலென்றன்
செங்கைபற்றி னானே (கேளாய் தோழி)

என் கழுத்தில் மங்கலநாண்
இருகையாலும் பூட்டி
அங்கிவலம் வந்தென் காலை
அம்மி மீதில் வைத்தான் (கேளாய் தோழி)

மந்தாரமும் பாரிஜாதம்
வானவர்கள் தூவ
சிந்தாமணி போலே நின்றான்
திண்புவியோர் காண (கேளாய் தோழி)

பூதலத்தில் வந்துதித்து
புண்யவதி யான
சீதாதேவி போலே நானும்
சிந்தைமகிழ் வேனே (கேளாய் தோழி)

ஓதாமலே சும்மா நின்றாய்
உண்மையுள்ளாள் அன்றோ
நீதியெல்லாம் உன்னிடத்தில்
நிச்சயமாய் உண்டே (கேளாய் தோழி)

பெரியாழ்வார ஆண்டாட்குப்பிரான் திருப்பதிகள் எடுத்துரைத்தல்.
(ஆருககாகிலும்பயமா சும்மாசொல்லட்டும என்பதுபோல)

## பல்லவி

திருமால்தினந்தினமே உறையுந்தலஞ் செப்புவன்கேளனமே

## அநுபல்லவி.

திருமாதருள்ஞான பத்திவைராக்யங்கொள்
திடபத்தர் புகழ்ந்திடும் வடபத்திரசயனத் (திருமால்)

## சரணங்கள்

போதார் பிரமன்முதல் தேவர்கள்சங்கம்
போற்றியனுதினமும் எத்துந்தென்னரங்கம்
நாதனுறையுங்கண்டி யூர்திருச்சங்க
நாண்மதியந்தஞ்சை காவிரித்தாங்கம்
நந்துபெருகுகுடந்தைதண்சேரை கணங்குடி
நந்திபுரநகரமயில்கணபுரம்அந்தணர்களுறை அந்தளூரெனும்(திரு

குருகூர்தென்புதுவை ஸ்ரீ வரமங்கை
குளந்தைவைகுந்தம்நற் புளிங்குடிகுறுங்கை
மருவார்பொழிலுறும் வரகுணமங்கை
வண்பரிசாரமொடு கந்துகக்கொங்கை
மாதர்மகிழுமனந்தபுரமோடுந் திருவாட்டாறு [யெனுந் (திரு)
வேரிமிகுதிருவாறன் விளையொடு நீலமுகில்படி சோலைமலை

திருவூரகம்வேளுக்கை கச்சியுந்தில்லைச்
சித்திரகூடமுடன் றிருக்கடன்மல்லை
மருவார்விகசித தாமரைகுல்லை
மாலையணியும்விண்டு வேழத்தையொல்லை
வந்துகாத்தமு குக்தனிடவெந்தை கடிகாசலம்
மாதவர்வணங்கு யாதவாததிரி போதுகமழ்பணிநாதமலை
யொடு (திரு)

மதுராபுரிதுவரை சாளக்கிராமம்
வதரிபிருதிகோ வர்த்தனம்நேமம்
இதமாய்வளர்நை மி சாரண்யம்நாமம்
எத்திமுனிவர்சொல் அயோத்தியந்தாமம்
இன்னமுபரிய நேகதலமுண்டு அவைகளில்
எதிலுனதுமதிபதியுமதையுரை பதுமமலர்முக மதிநுதலியே (திரு

ஆண்டாள் அழகியமணவாளனைத்துதித்தல்.

இராகம் தன்யாசி தாளம் ஆதி.
பாகிமதனகோபாலமுகுந்தாபாலித்த

பல்லவி

அரங்கனைப்பணிமனமே தினந்தினமுதென்
அரங்கனைப்பணிமனமே.

அநுபல்லவி

வரங்கள் பலவுஞ்சுப மங்களங்களுந்தினம்
இரங்கியன்பருக்கருள் எம்பெருமானை (அரங்கனை)

சரணங்கள்

எந்தத்திருப்பதிகள் இந்நிலத்திருந்தாலுஞ்
சொந்தப்பதியிதென்று சுகமுடன்கண்வளரும் (அரங்கனை)

சேவடிவணங்கிய சேதனர்கண்டுய்யக்
காவிரிமத்தியிற் கண்வளர்ந்தருளிய. (அரங்கனே)

கருவிற்றிருவுடைய காரிமாறன்பணியத்
திருவனந்தாழ்வானிற் றேசுறப்பள்ளிகொண்ட (அரங்கனே)

இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஏகம்
ஸந்தோஷமாகவே யிந்தனவை

பல்லவி

அடியேன் பொருட்டால் அருள்புரிவதற்கிங்கே வாவா வா வா

அநுபல்லவி

கடிமலரிணையடிக்காட்சிதந்தெனைநிதங் காகா கா கா (அடியேன்)

சரணங்கள்

தஞ்சமென்று பணியும் ஆனைமுன் வந்ததுபோல் வா வா வா வா
பஞ்சவர் தேவியைப் பாதுகாத்ததுபோலே கா கா கா கா. (அடி)

தானவன் மகனுக்காய் தூணிலுதித்ததுபோல் வா வா வா வா.
பானுதனை மறைத்துப்பார்த்தனைக் காத்ததுபோல் கா கா கா கா(அ

குன்றுயாதோளனே கோவியர் லோலனே வா வா வா வா.
அன்றுமழை தடுத்து ஆநிரை காத்ததுபோற் கா கா கா கா[அடி]

அந்தரங்கநாத அரங்க நகரப்பா வா வா வா வா.
செந்திருமருவிய திருமறுமார்பனே கா கா கா கா [அடியேன்]

[ஜானகாகை யெகையே என்பது போல]

கானடா

பல்லவி

உன்றனடியே பணிந்தேன் அடியேன் (உன்றனடியே)

அநுபல்லவி

என்றனைக் கண்பார்ப்பாய் இடர்களைத் தீர்ப்பாய் (உன்றனடியே)

சரணங்கள்

செந்திரு மணாளா . செங்கமலத்தாளா (உன்றனடியே)
ஆனந்தரூபா அருள்பற்பநாபா (உன்றனடியே)
தேவர் தொழும்பாதா ஸ்ரீ ஜகந்நாதா (உன்றனடியே)

[காமுனி வினவே இப்புடு என்பதுபோல]
இன்னும் வரக்காணேனே மன்னன்
எதுகுலகாம்போதி தாளம்

பல்லவி

நந்தணிபரந்தாமனே-என்னை வந்து ரட்சித்தருளாய்

அநுபல்லவி

இந்திராதி வந்தித கந்தமலர்ப்பாத
நந்தகோபகுமார சந்தான கோபால-[நந்தணி]

சரணங்கள்

ஆதிமூலமென்றே முன்னாள் வாரணம்
ஓதவே வந்து நின்று ய்
வாதை செய்யுங் காரவை மோதிமுடித்தபின்பு
போதகந்தனைப் புரந்த வேதாந்த மெய்ப்பொருளே [நந்தணி]

கேசவனே தாமோதரா பால
கிருஷ்ண கிருபாசாக ர
தாசரதியே ஞான தற்பரனே மோகன
தாசர் தொழும் வாமன சர்பேசசயன [நந்தணி

முன்னொருநாள் சானகிக்காய்ச் சென்று
மூரிவில்லை யொடித்தா ய்
பின்னை தனையேறடர்த்துப் பெட்புடனணைந்தவா
என்னை மணஞ்செய்தருள இவ்வருத்தமில்லையா [நந்தணி]

[சாமியைக் காணமலிருப்பேனோ என்பதுபோல]
எந்தனுடனருமை துஸ்யாஸனயிந்தவம்பி

பல்லவி

தென்னரங்கேசனைப் பணிவாயே [தென்ன]

அநுபல்லவி

இன்னருள்புரிகுவன் என்மனமே நீ [தென்ன]

சரணங்கள்

நன்னயசீரங்க நாயகி கேள்வனைப்
பன்னக சயனங்கொள் பகவானைத் [தென்ன]
என்னுயிரிலிருக்கும ஈசனை நேசர்கள்
கன்மந்தொலைக்கவந்த காரணனைத் [தென்ன]

மாவலியிடத்தினில் மூவடி வாங்கியே
மேவியளந்த திரு விக்ரமனைத் [தென்ன]

அஞ்சனவண்ணனை அழகிய கண்ணனை
தஞ்சமென்றோரைக்காக்கும் தற்பரனைத் [தென்ன]

---

எங்கே என்று தேடுவேன்
நாதநாமக்கிரியஆளாய்

## [கிளிப்பாட்டு]

சின்மயரூபனடி தன்மசல்லாபனடி
என்முன்னே வாரானேடி கிளியே
நன்மையைத் தாரானேடி [க]

குன்றுயர் தோளனடி என்றிருவாளனடி
இன்றிங்கோ மேவானேடி கிளியே
நன்றெனைக் காவானேடி [உ]

தென்னரங்கேசடி என்னுயிரீசனடி
தன்னருள் தாரானேடி கிளியே
இன்னலைத் தீரானேடி [ஙு]

கஞ்சநற்பாதனடி பஞ்சவர் தூதனடி
தஞ்சமென நில்லானேடி கிளியே
அஞ்சலெனச் சொல்லானேடி [ச]

அனந்தனற் பாயனடி நினைந்தவர் நேயனடி
மனந்தனிலே காணேடி கிளியே
தினந்துணையாகானேடி [ரு]

---

## தேமொழியாண்டாள் திருவரங்கத்துக் கெழுதல்

[இந்துமுகிவானிகி மனசிந்துலேதய என்பதுபோல]
அம்பவேகரூவேசின்று

பல்லவி

கோதிலரங்க நகரைக்குறித்துக் கோதையுஞ்சென்றாள் பூ
மாதையும் வென்றாள்

அநுபல்லவி

மாதவர்களும் வானவர்களும் மாமலர் தூவிப்
பாதம்பணிய மணிப்பல்லக்கினிற் பாங்குடன் மேவி இந்தப்
பார்புகழ்தேவி [கோதிலாங்க நகரைக்குறித்து]

சரணங்கள்

தூயபணிகள்தரித்துச் சுற்றிலும் தோழியரேக
வேயர்குலத்திலுதித்த தந்தையும மெய்மகிழ்வாக மிகும்
வெந்துயர்போக [கோதிலாங்க நகரைக்குறித்து

முத்துக்குடைகள்பிடிக்கச் சாமரம் முன்புறம்போடத்
தத்தை நிகர்த்தமொழி மடந்தையர் சங்கம் நன்றூட—ஜய
மங்களம்பாட [கோதிலாங்கநகரைக்குறித்து

மேகம்நிகர்த்து மேளஒலிகள் விண்டலத்தோங்கப்
பாகவதர் பல்லாண்டிசைத்திடப் பன்முறைபாங்காய்—மற்றப்
புன்மைகள் நீங்க (கோதிலாங்க நகரைக்குறித்து

சேடனுஞ் சொலற்கரிய செல்வங்கள் செழித்திடும் பாண்டி
நாடுகடந்து நீடுகாவிரி நன்னதி யீண்டி—ரங்க
நாதனை வேண்டிக் [கோதிலாங்கநகரைக்குறித்து

---

## பொலங்கொடிகாவேரியைப் புகழ்ந்துகொண்டாடல்

[போ-போ-மீவ செலியா என்பதுபோல]

இதாக்கோனுன் பிறந்தேன்

இராகம் நாதநாமக்கிரிய ஆதிதாளம்

பல்லவி

உண்மையேஉரையாய் உண்மையேஉரையாய்[உண்மையேஉரை ]

அநுபல்லவி

வண்மையுடையபர வாசுதேவன்றனக்குக்
கண்மணியாகிய காவேரி [உண்மையேஉரையாய்]

தென்னரங்கன்றனக்குத் திருமருமாலையாய்
என்ன புண்ணியங்கள்செய் தெய்தினை நீ [உண்மையேஉரையாய்]

அரிமாதவனுடை யருள்சுரந்தாலென்னப்
பாவி நிலத்தில்வரும் பாக்யவதி [உண்மையேஉரையாய்]

சீதானமர்ந்திடுந் திவ்வியதேசத்தில்வெகு
ஆதரவுடன்வரும் அனபுடையாய் [உண்மையேஉரையாய்]

---

## நேரிழை காவேரியில நீராட்டிழைத்தல்

[கேளாய்நீ தோழி சுகமாய் கேளாய்நீதோழி என்பதுபோல]

பல்லவி

இராகம் - முகாரி ஆதிதாளம்

சீதபபதேருசன மா
நீராடினளே—சுகமாய்—நீராடினளே

அநுபல்லவி

பாரோர் புகழும் பட்டர்பிரான் மகள் [நீராடினளே]

சரணங்கள்

திண்புவியோர் நம்புகாவிரி தன்னிற்
பெண்பெருமாள் எங்களீஸ்வரி (பாரோர்) (நீராடினளே)

திருமஞ்சன த்ராவ்யந்தன்னையே—தோழி
தேய்த்துவிட எங்களன்னையே (பாரோர்) நீராடினளே)

பற்றுமஞ்சள் மெள்ளக்கூசியே—ஒரு
பாங்கிதா வாங்கிப்பூசியே [நீராடினளே]

கும்பமுனி தன்னைக்காணவே உருக்
கொண்டுவந்த பொன்னிநாணவே [பாரோர்] நீராடி

---

## ஆண்டாளுக்கைய னரங்கமகத்துவ முரைத்தல்

[குருகைநம்பிகைக் காங்குவிநெஞ்சமே என்பதுபோல]

அடாணவணத்தரும்பே முகாரி

பல்லவி

மாலுக்கு மாமலர் சூடிக்கொடுத்தாளே அந்த மாதவனிங்கு
வந்தவிதஞ்சொல்வேன் விந்தையாய் நீகே ளே

அநுபல்லவி

நீலக்கருங்குழற் கோதை நல்லாய்யென்றும்
நித்தரு முத்தரும் பத்தருமேதொழும் (மாலுக்கு)

## சரணங்கள்

ஓலப் பெருந்திரைப்பாற்கடலின் மேவிப் பண்டுநான்முகன்மிக
ஓங்கு தவஞ்செய்யப் பாங்குடனே தேவி
சாலப்பொருந்தவி மானத்தின்மேற்கொண்டு
சத்தியலோகஞ்சென்று நித்தியவாசஞ்செய்தான் [மா]

வேரியந்தாமரைப்பூமகளின்நாதன் சிலநாளங்கிருந்து
விண்ணவர்நற்றுதி பண்ணுமலர்ப்பாதன்
சூரியன்றன்பதி தன்னில்வந்தேயவன்
றெண்டுபுரிந்திடக் கண்டுமகிழ்ந்தனன் [மா]

பைவருபாம்பணைப் பள்ளிகொள்ளும்மாயன் சிலநாளங்கிருந்து
பத்திமிகக்கொண்டு மித்திரனின்சேயன்
வைவச்வதமனு தெய்வபக்தியுடன்
வந்தனஞ்செய்திடச் சிந்தைமகிழ்ந்தனன் [மா]

பூதலத்துள்ளவர் யாவருங்கண்டுய்ய இட்சுவாகுவென்பன்
பொருந்துசிந்தையோ டருந்தவஞ்செய்ய
மேதகுநற்குண மாதவர்வானவர்
மெச்சுமயோத்தியி லச்சுதன்மேவினன் [மா]

சோதிமிகுந்திடு நீதிமன்னர்சூழ ரகுராமன்பொன்முடி
சூடுந்தினததில் வீடணன்வாழ
மேதினியோர்தொழ அந்தவிமானத்தை
வியந்தளித்திட நயந்துபெற்றனன் [மா]

பெற்றவிபீடணன் பத்தியுடன்மண்டு விமானந்தங்கிய
பின்னைமணாளனைச் சென்னியினிற்கொண்டு
நற்றவர்போற்றிடும் இத்தலத்தில்வர
நந்தனின்மைந்தனுஞ் சிந்தையுவந்தனன் [மா]

சீர்திகழும்படி மார்கழிநீராடித் திருப்பாவைபாடிச்
சிந்தைமகிழ்ந்திடுந் திருமல்லிநாடி
ஏர்திகழ்காவிரி சூழுமாங்கத்தில்
எத்திசையுந்தொழ நித்திரைகொண்டனன் [மா]

## இளம்பிடிக்கேகுழி வளம்பல வுறைத்தல்

[சங்கீதம் ராமாயணம்—மான்காள் பழிகொண்டீர் என்பதுபோல]

பொன்னார்மேனியனே

இராகம் சங்காபரணம்

### கண்ணிகள்

வாராய் கண்மணியே மலர்
மாநிகராகிய தேமொழியே பக
வானடிமாமலர் மாநிதிகாணப் [க]

பாராய் பெண்ணரசே இது
பன்னிருநாமமும் மன்னிநாவுடை
உன்நடையேபயில் அன்னவியூகம் [உ]

ஓராய்சிந்தையிலே உல
குண்டுமிழ்மானிகர் கொண்டுலாவிய
விண்டலமீதுயர் தண்டலையீதே [ங]

சீரார்சேயிழையே இவ
செந்துவராடைய ணிந்தமுக்கோலினர்
வந்தனைநாடிம கிழ்ந்திடுகின்றார் [ச]

எண்ணாய் நெஞ்சினிலே இவை
இந்தவராங்கனு வந்தணிமாமலர்
கந்தமிகுந்திடு நந்தவனங்கள் [ரு]

பண்ணாய் வந்தனமே என்
பைங்கிளியேயிது துங்கமதாய்மிக
மங்களமேதரு ரங்கவிமானம் [சு]

பேணாய் பெண்மயிலே இது
பீடுடைவைணவர் கூடியுலாவிய
கோடிநன்மாளிகை நீடியவீதி [எ]

காணாய் கண்ணிணையால் என்
கன்னிகையேயிது பொன்னொளியேதவழ்
துன்னியகோபுர மின்னியவாயில் [அ]

காப்பக நூலகம்
18352

## தாதைகரத்துழிக் கோதையைத்தேடுதல்

நீலாம்புரி

லாவணி

கண்ணிகள்

சூடிக்கொடுத்தவளைச் சிவிகையிலிட்டெவர்க்கு ந்
தோன்றாமற் கொண்டுவந்தே னே
முடிபல்லக்கில் வருமென்மகளையா ரோ
மோசஞ்செய்யக் கொடுத்தேனே. [க]

திருத்துழாயிற்பிறந்த திருநகர்கோதையை த்
தேடிப்ப றித்துக்கொண்டாரா ரோ
பொருத்தமுள்ளவர் போலென்கருத்தை வஞ்சித்துக்கொண் டு
போனவருக்கென்ன பேரோ. [உ]

கையிலுற்ற தங்கத்தைக் கடலிலெறிந்தாற்போலெ ன்
கன்னிகையை யிழந்தே னே
மையிலங்கிய விழியென்பெண் முகங்காணும ல்
மயங்கித் தியங்கி நொந்தேனே. [ங]

என்மனையாளான விரசை யிதனைக் கேட்கி ல்
எப்படியுயிர் தரிப்பா ளோ
கன்மனங் கொண்டவர் எவர்செய்ததோ வெனக்கு க்
கஷ்டப்படவேண்டிய நாளோ. [ச]

மைப்படி மேனியன் ஸ்ரீ ரங்கநாதன்றா ன்
மாயையாற் கொண்டுபோனா னோ
அப்படியிருந்தாலும் வழிப்பறிசெய்வது ம்
அவனுக்கு மிக நியாயந்தானோ [ரு]

உச்சிதமணிகளை வைத்திழைத்த நகைக ள்
ஒன்றல்லக் குழந்தைக் கனேக ம்
பச்சைக்கிளிமொழி யென்கோதையை யிழந்தே னே
பதறுதே யென்னுடைய தேகம். [சு]

பூவினிலமர்ந்தருள் ஸ்ரீரங்கநாய கி
பூவுலகுக் கெல்லாந்தா யே

நாவிலுரைக்கவொண்ணு வெழிலுடைக்கோ றை
நாயகியைத் தருவாயே. [எ]

சந்த்ர புஷ்கரணியின் கரையினிலேவள ர்
தண்புன்னை விருக்ஷமேனல்லா ய்
இந்த்ரவிற் போலப்புருவ முடையகோ தை
இங்கு வந்ததுண்டோ சொல்லாய். [அ]

கிளிமொழியென் குழந்தை யிவ்விடத்திலிருக்கு ங்
கிளிமண்டபத்திலிருப்பா ளோ
நளினமுகமுடையகுழந்தை யென்னைக் காணும ல்
நாடியே மனந்தவிப்பாளோ. [கூ]

---

## உரங்கிளர் மறையோன் அரங்கனைப்புகழ்தல்

(வாவும் பிலாவும் கொய்யாவும் பழுத்திருக்கும் என்பதுபோல)

நடக்கநடக்க போச்சே ஏழை

கண்ணிகள்

காவிரிமாநதி சூழுமரங்கத்துறை-காரணனே-அண்ட-பூரணனே
தேவரும் யாவருமேவியடி பணியுஞ்-சீதரனே-புய-பூதரனே [க]

[பானே
நாகணைமீதினில்யோகநித்திரைசெயும்-நப்பானே-பொன்-னம்
வாகுறுமலர்மகளாகமதனில்வளர்-மாயவனே-எங்கள்-தூய
வனே [உ]

பூதலமுழுதையுமோரடியாயளந்த-பொற்பதனே-மிக-அற்புதனே
ஆதியுமாகியனாதியுமாய்நின்ற-ஆரணனே-திரு-நாரணனே. [ந]

சோதிவடிவுடனேமங்களகுணங்கொண்ட-சுந்தரனே-ராமச்-சந்திரனே
வேதவேதாந்தங்களோதவெங்கும்நிறைந்த-மித்திரனே-ராம-பத்
திரனே. [ச]

தத்துவரூபதயாபர அர்ச்சுன-சாரதியே-குண-வாரிதியே
நித்யநிரஞ்சனநிர்ப்பயநிர்மல-நிஷ்களனே-சுப-புஷ்கலனே [ரு]

ஆனந்தரூபவஞ்ஞானவிருளகற்றும்-ஆதவனே-எங்கள்-மாத
[வனே
தீன்பந்து வேமலர்க் கோதையைத்தந்தருளாய்-திண்ணியனே-எங்கள்
[புண்ணியனே.

## விருத்தம்

எட்டெழுத்தினுட்பொருளேயமரரேத்துமெழி லரங்கநாய கனே யென்று போற்றும், பட்டர்பிரான்றனை நோக்கிப்பறவை யேறும்பரம் புருடன் மனமகிழ்ந்து பரிவாய்ச்சொல்வான், மட்ட விழுங்குழற்கோதை நம்மைநாடி வந்தனளங்கி கரித்தோ மணமு மீதே, சிட்டர்தொழும் புதுவைநகர்க்கேகு மென்னஸ்ரீ விஷ் ணுசித்தனுமே செப்புவானே.

மயலாடே மந்து பெட்டனே என்பதுபோல

### பல்லவி

உன்றன் மாயங்களிவ்விதமென் றொருவரறிந்ததுண்டோ

### அநுபல்லவி

கந்தமலர்ப்பாதம் வந்தடைந்த வென்னைக்
கண்கட்டிவித்தைசெய்தாய் (உன்றன் மாயங்களிவ்விதமென்)

### சரணங்கள்

மேலைவானவர்களி னாலுங்கூடாதே ஞான
நூலே தெரியாத பாலகனான என்
னாலே முடியுமோதான் (உன்றன் மாயங்களிவ்வித)

சிந்தைதனைமயக்கி யென்றன் குழந்தையைப்
பந்துக்களைவிட்டு வந்தடையும்படி
விந்தைபுரிந்தனையே (உன்றன் மாயங்களிவ்வித)

சூடிக்கொடுத்தவளைத் தேடிக்கோயில்முழுதும்
ஓடியுங்காணமல் நாடியிங்குன்னோடு
கூடியிருக்கக்கண்டேன் (உன்றன் மாயங்களிவ்வித)

### சந்த விருத்தம்

வேதன்றனோடுநிகர்வேயர்குலநாதனு ம்
ஸ்ரீரங்கராஜருடை மாபுகழ்மேயோதி யே
மேலுஞ்சொல்வானமல கேசவமுகுந்தனே குயில்போலு ம்
நாதங்கொள்கோதைதனைநீ புதுவையேகி யே
யானென்றன் மாமனையிலேதரா வுவந்துக ண்
ணாலஞ்செய்தே யெவருமே மகிழும்வாழ் வெனக்கருள்வாயெ ன்
றோதுந்தண்மாமொழியை மாதவனுளே மகிழ் ந்
தாநந்தமாகியவனேபுரிகுவோமெ ன

ஓலங்கொள் வேலையமுதாமினிய மாமயிலையவரோடு ந்
தீதொன்றிலாதபடியே கெனவியம்பவு ந
தான்முந்து கோதையொடு மாபுதுவைமேவின ன்
சீர்கொண்ட பார்புகழ வேயிலகுநீதிநெறியுடையோ னே

---

## பகர்வளம் புதுவை நகரலங்கரித்தல்

### மட்டு விருத்தம்

பின்பொருதினத்தாங் கு
மன்புகலும் நாளுமே வ
அன்புடனலங்கரித்தா ன்
றன்பதியை வேயர்கோ னே.

(தூப்பிற்பிள்ளை வைபவமென்னசொல்லுவேன் என்பதுபோல)

நலுங்குக்கு வைக்கிறாரா

### பல்லவி

பட்டர்பிரானலங்கரித்தனர் பாங்கதா இந்தப்
பாரோர் புகழச்சீரார் புதுவைப் [பட்டர்]

### அநுபல்லவி

சிட்டர் தொழுந்திரு மாளிகைவாசலிற்
றேசுபொலிந்திட முத்துப்பந்தலிட்டு
மட்டவிழ்மாமலர் மாதவிப்பந்தலில்
வாழைகமுகுகள் சூழவுமேகட்டிப் [பட்டர்]

### சரணங்கள்

சாணுக்குச்சாண்மிக்க கோலங்கள்தீட்டித்
தனித்தனியாகம லர்ச்சரங்கள்கட்டித்
தூணுக்குத் தூண்முத்துத் தாமநிரைகளைத்
தூக்கியனைவரும் நோக்கிவியப்புறப் [பட்டர்]

கூடிய பொற்றகட் டுசலுண்டாக்கிக்
கொடுங்கையமைத்துவி தானங்களுங்கட்டி
ஏடலர்தாமரை மாலையைநாற்றியே
யாவருங்கண்டிது தேவசபையென்ன [பட்டர்]

செச்சையும் பந்தலும் வீதிகளெங்குந்
தெளித்து நற்றோரணம் மாதர்கள் கட்டிட

மச்சணிமாடத்து யர்ந்தகண் ணுடியை
மாட்டிப்பதாகைகள் நாட்டி வியப்புறப் [பட்டர்]
ஆரும் புகழும் அரங்கரே கோதையை
அன்புடன் கூடிம ணஞ்செய்யவேயிங்கு
வாரும்வாருமென் றழைப்பதுபோலவே
மாடங்கள் சேர்கொடி ஆடையசைதர [பட்டர்]

---

## அரங்கமன்னன் வாராமல் இரங்கியன்னந்தனி புலம்பல்

(தலாதலயவரைனதப்பின்சவசமா, யென்பதுபோல)
எப்போ மனம் யிரங்காதோ

முகாரி ஆதிதாளம்

பல்லவி

இன்னம் வரவில்லையே என்ன காரணமோ

அநுபல்லவி

என்னையாளுமுகுந்தன் தென்னரங்கன் வைகுந்தன் [இன்னம்]

சரணங்கள்

எனது தந்தையை நோக்கி எய்துவேனென்றே
மனதுகளிக்கச் சொன்னான் மாதவனன்றே [இன்னம்]

ஆனாலுமென்னைப்போல் அவனியிலுண்டோ
தீனபந்துவும்நாவாற் செப்பும்மொழியிரண்டோ [இன்னம்]

வேலிவந்திடும்மாது விலக்கியதுண்டோ
வேலிபயிரைத்தின்றால் விளைவதுமுண்டோ [இன்னம்]

சதிரான அரங்கனின் சந்நிதிநேரே
மதிநுதலீர்போய்ச்சொல்ல மாட்டீரோ நீரே [இன்னம்]

---

## இன்னுயிர்த்தோழி நன்னுதற்றேற்றல்

[பக்ஷமிருக்கவேணும் போய்வாரோன் என்பதுபோல]
நாலுகொழுவனா கோவே

பல்லவி

ஏதுக்கிந்தவிசாரம் என்றோழி கோதாய்
ஏதுக்கிந்தவிசாரம் என்றோழி.

அநுபல்லவி

ஆதவனுதிக்குமுன் அரங்கநகரப்பன்
அரைநொடியில் வருவன் ஐயமில்லை சொன்னேன் ஏதுக்

சரணங்கள்

தன்னனெஞ்சறியாமற் சன்னதமும் வருமோ
தாணியுள்ளோரறியத் தானே புலம்புகின்றாய் [ஏதுக்]

உள்ளக்கருத்ததனை வள்ளலறியாதோ
உம்பர்தொழுமரங்கன் ஓடிவருவன் சொன்னேன் [ஏதுக்]

பத்தரக்ஷகனென்றும் பரமதயாளனென்றும்
பாரிலுள்ளோர் சொல்வது பழுதுபோகுமோ அம்மா [ஏதுக்]

உன்முன்னே நாளையவன் உதயத்தில் வாராவிடில்
உள்ளங்கையில் முடிப்பேன் ஒன்பது கொண்டை [பாராய்ஏது]

---

## உழுந்துருளும்பொழு தரங்கச் செழுந்தகையு மெழுந்தருளல்

(போ போமனே பொம்மனே பாமரோவானி என்பதுபோல)

கண்டாளே சீதை கவடசன்யாசிவேஷம்

ரூபகதாளம் அனுமந்தபுஹாபல ராவணுக்ஷமே என்றமெட்டு

பல்லவி

வந்தானே தென்னரங்கன் வில்லிப்புத்தூரில் (வந்)

அநுபல்லவி

பைந்தொடி கோதையைப் பாணிக்கிரகணஞ் செய்ய (வந்)

சரணங்கள்

கோகிலமாமொழிக் கோதை தந்தை முதலோர்
யேகியேயடிபணிந் தெதிர்சென்றழைத்துவர (வந்தா)

வெண்களச் செஞ்சிறை வினதை சிறுவன்மீதிற்
பண்களாலிசைபாடிப் பாகவதர் கொண்டாட (வந்தா)

கோயிற்பரிசனங்கள் கூடிப்பணிகள் செய்ய
வேயர்கோன்மாளிகையில் விளங்கும்பந்தலுக்குள்ளே [வந்தா)

---

## பூண்டாள் முதற்றொடங்கி யாண்டாட் கலங்கரித்தல்

(ஆரண்யத்திலோராசன் நித்ரை செய்யவே என்பதுபோல)

**கண்ணிகள்**

| | |
|---|---|
| செல்வமிகும் நல்லகுணம் | சேருந்தையலாள் |
| தென்னரங்கர் மீதில் வைத்த | சிந்தை மையலாள் |
| உவந்தருளத்திருக்கல்யாண | தினத்தை நாடியே |
| ஊரிலுள்ள தோழியர்கள் | வந்து கூடியே |
| நெஞ்சுகந்து மஞ்சட்காப்பு | நிரம்பச் சாத்தியே |
| நிறந்தழைக்க நீராட்டிக் | குழல்களாற்றியே |
| விலையுயர்ந்த பட்டுடுத்தி | மேனி காணவே |
| விண்ணுலகிற் பெண்களெல்லாம் | வந்து காணவே |
| பாடகந்தண்டை சிலம்பு | பதத்திற் பூட்டியே |
| பட்டையரை ஞாணையெடுத் | திடையில் மாட்டியே |
| சரப்பணிகள் முத்துவடந் | தகதகென்னவே |
| தங்குமொளிமணிவடங்கள் | கழுத்தில் மின்னவே |
| அலங்கரித்து நல்வளைகள் | கையிற் சாத்தியே |
| அணிகொள்திருவாழிகளை | விரலிறசேர்த்[illegible]யே |
| ஓலைமுதலாபரணம் | காதுக்கேற்கவே |
| உத்தமிகள் சித்தமகிழ் | வாகிச்சேர்க்கவே |
| தைலமிட்டுக் குழலைவாரிப் | பின்னிக்கட்டியே |
| சாந்தணிந்து மாலைச்சுற்றி | நன்றுகிட்டியே |
| தலையிலிடுமாபரணம் | அணைத்தும் பூட்டியே |
| தண்கமலப்பூச்சரங்கள் | தொடுத்துச்சூட்டியே |
| அழைத்து வந்துவேதிகையில் | மெள்ளமெள்ளவே |
| அருகில் விட்டாராரங்கனுமே | மகிழ்ந்துகொள்ளவே. |

---

## மின்னார்சிரோமணியை மன்னர் மணம்புரிதல்

**விருத்தம்**

தத்தைமொழி முத்துநகை தந்துமருங் கிந்துமுகப்
பத்தினிவி ரசையொடு பட்டர்பிரான் மாமுனிவன்
உத்தம முகூர்த்தமதி லொண்டொடியாள் கோதைதனைத்
தத்தமது செய்யவந்தச் சர்வேசன் கைப்பிடித்தான்

(வாடலகிதே என்பதுபோல)
சுருட்டி ஆதிதாளம்

பல்லவி

மாமணஞ் செய்தான் மாமணஞ்செய்தான்—நல்ல
வண்புதுவையினில் (மாமணஞ் செய்தான்)

அநுபல்லவி

பூமகள் கோதையைப் பொன்னரங்கேசன் [மாமணஞ்]

சரணங்கள்

அயன்முதலாகிய அனைவருங்காண
உயர்மணியாதனம் உவப்புடன் மேவி
கயநிகர்நடையுடைக் கட்டழகிகோதையை
நயமுறு வலப்புறம் நாடிமகிழ்வுற்று (மாமணஞ்)

பொங்குபுகழ்ப்புதுவைப் பனிதனளிக்கக்கோதை
செங்கமலக் கரத்தைத் திருக்கையாற்பற்றி
மங்கலங்கழுத்தினில் வளம்பெறவேயணிந்து
சங்கு சக்ர பீ தாம்பர தாரி (மாமணஞ்)

நிலம்புகழாண்டாளின் நின்மலத்தாளெடுத்
தலங்காரமாகவே அம்மிமீதேற்றித்
துலங்குமக்கினி தன்னைச் சுற்றிவலம் வந்து
நலஞ்சேரருந்ததியை நன்றாகக்காட்டி (மாமணஞ்)

வானவர் கற்பக மாமலர்கள் தூவக்
கானமொடு கந்தர்வ கன்னியர் நடிக்க
ஞானமா முனிவர்கள் நன்குபல்லாண்டிசைப்ப
மானவநாரியர் மங்களம்பாட (மாமணம்)

---

## கல்யாணப்பாட்டுகள்

### விருத்தம்

காவிரிவந் தடிதொழப் பாம்பணைமேவிக் கண்வளருங் கரியமாலுந் தேவர்களுமயாவர்களும் மனங்களிப்பத் திருமணத்தைச் சிறக்கச்செய்து, மூவுலகோர் தொழவிருக்க வந்தருணந் தெரிவையர்கண் முருகார் கோதா, தேவிமன்ன ரிருவோர்க்கும் சிறந்தவுப சாரணையெலாஞ்செய்வித்தாரே.

(லக்ஷ்மி கல்யாணம் என்பதுபோல)

பல்லவி

லட்சுமி கல்யாணம் வைபோக்யமே
லட்சுமி கல்யாணம் வைபோக்யமே

அநுபல்லவி

அக்ஷயசிதானந்த அகிலகுணமூர்த்தி
பக்ஷமுடனெங்களை ரக்ஷியுந்தாயே (லட்சுமி)

சரணங்கள்

கேசவமுகுந்தஹரி கிருஷ்ணநரசிம்ம
தாசரதி கோவிந்த சனகாதி வந்த்ய (லட்சுமி)

நந்தநந்தனவிமல நவநீதசோர
சந்தான கோபால சகலாபிராமா (லட்சுமி)

அச்சுதாநந்தவர அதுலஜனபால
மச்யாவதாரஸ்ரீ வடபத்திரசாயி (லட்சுமி)

இக்பாசுகானந்த இந்திரா ரமண.
ரகுநாதயதுநாத ரங்கேசதேவி (லட்சுமி)

திருத்துளவி லவதரித்துச் செழித்தமலர்க்கோதாய்
பொருத்தமுள்ள மால்தேவி பூலோகமாதா (லெட்சுமி)

அன்னநடை மின்னலிடை கன்னல்ரசவாணி
நன்னயவிசிதாங்கி பன்னகவேணி (லட்சுமி)

---

## நலுங்குநோட்டு

[சியாமகளே மீனாக்ஷி சுந்தரேஸ்வர சாக்ஷியென்பதுபோல]

நலுங்கிட்டாள்கோதை நாகரீகமுடனே
ரங்கமன்னர் மேனியெல்லாந் தங்கநிறமாக
ராகவ கேசவ மாதவஸ்ரீதர
நாராயணவாராயிடர் தீராயருள் தாராயென (நலுங்கிட்டாள்)

கந்தமலர்வேதா வந்துதொழும் மாதா
கஞ்சமிகும் வாவியினில் நெஞ்சுதடுமாறிக்
காவென்ன வாவென்னு மாவுறு நோவுறு
கார்மேனிகொள் வீராவதி சூராவெழில்மாராவென (நலுங்கிட்)

நல்லமஞ்சளெடுத்து மெள்ள மெள்ளவடுத்து
நந்தரியணிகையுடன் சிந்துவரும்மாது
நாடியமார்பிலுங் தோளிலுங் தாளிலும்
நன்றுயெதிர் நின்றுயிழை யின்றுரையும் வென்றுளென (நலுங்)

சுந்தரி மெய்ஞானி செந்தமிழில் வாணி
துளவில்வந்தருளிய வளமுறுமாது
துங்கவரங்களின் செங்கரபங்கயச்
சொந்தம்பெற வந்தம்புவி நின்றின்றுகை முந்தன்பொடு (நலு)

வேறு நலுங்கு

(நலுகுகுமா ராசாமி-நலுகுரிலோசீகு என்பதுபோல)

பல்லவி

ஆண்டாட்கு ரெங்கமன்னர் அமர்ந்து நலுங்கிட்டார்
கோதைக்கு ரெங்கமன்னர் கொஞ்சி நலுங்கிட்டார்

அநுபல்லவி

தூண்டாமணிவிளக்காய்த் தொல்லுலக மேலும்
வேண்டும்வரந் தந்தருள வில்லிபுத்தூர் வாழும்-எங்கள் (ஆண்

சரணங்கள்

தன்மீது மையல்கொண்ட தாபமெல்லாம் ஆறப்
பொன்மேனிதன்னிலெங்கும் பூம்புளகம்மீற—எங்கள் (ஆண்)

கையிலிட்ட பொன்வளைகள் கலகலவென்றார்க்க
மையிலங்கு கண்ணியர்கள் வந்து வந்து பார்க்க—எங்கள் (ஆண்

வானவர்கள் கற்பகத்தின் மாமலர்கள் தூவக்
கானமுறும் பாகவதர் கண்டுவந்து மேவ-எங்கள் (ஆண்)

மண்ணிலுள்ள விண்ணிலுள்ள வாத்தியங்கள் ஒலிக்கக்
கண்ணுடையோர் கண்கள்செய்த புண்ணியங்கள்பலிக்க-எங்கள்

---

## பத்தியம்

ஸ்ரீதாமுகுந்தனே தசாதன் மைந்தனே
ஸ்ரீரங்கநாதனே சேஷசயநா
மாதவதயாபூர்ண கோடிமன்மதரூப
மங்களகுணகரா வாரிசாக்ஷ

பாதமலர் சிலையிலிட் டகலிசாபந்தீர்த்த
பரமகாருணிகனே பத்மநாப
வேதவேதாந்தங்கள் தேடியுங்காணாத
விமலவாசுபயோக வேங்கடேச-பண்டு
பூதலமளந்தவா பூவாரகா-நம்பு
போதகமழைத்திடும் புனிதநாமா-வேணு
நாதரச பரிபூர்ண ஞானமூர்த்தி
நன்குதாம்பூலங்கொள்ளுவீர் ராஜ ராஜ

வேறு பத்தியம்

அன்னநடை மின்னலிடை வண்டுவிழிசெண்டு முலை
ஆலிலைத்திருவுதர முடையபெண்ணே
நன்னய சுகானந்த கல்யாண குணபூர்ண
நாகரிக மிர்துவசன முடையகண்ணே
பன்னக சடாபார வகளங்க மதிமுகப்
பவளவிதழ் நகையிலகு மென்றன் மானே
துன்னுகருங் குழலழகி கமலமலர் நயனவதி
தோகையேயுன் மீதில் மோகமானேன்-இன்று
என்னுடைய மடிமீது வந்துநீயே-நல்ல
இன்பமுள வார்த்தைகள் தந்திடாயே-இங்கு
தன்னை நிகரில்லாது தங்குகுயிலே
தந்தவெற்றிலைபாக்கு வாங்கடி சாசமயிலே.

---

## செண்டு

கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தனும் எங்கள்
கோதைநாயகியுடன் செண்டாடினார்-பூச் செண்டாடினார்
வாடாமல்லிகைமலர் மாலையணிந்து கோதை
மன்னருடனிருந்து செண்டாடினாள்-பூச்-செண்டாடினாள்
அன்னமென் னடைகொண்ட மின்னிடை யாளுடன்
அழகி மாணவாளன் செண்டாடினார்-பூச் செண்டாடினார்

பண்ணிசைவேய்ங்குழல் கண்ணனுடனேகூடி ப்
பட்டர்பிரான்மகள் செண்டாடினாள் —பூச்— செண்டாடினாள்
தென்னாதெனாவென வண்டுமுரலுஞ் சோலைத்
தென்னரங்கன் கோதையுடன் செண்டாடினார்— பூச்செண்
தன்னாதனாம் ரங்கமன்னருடனே கோதை
சந்தனத்தில் நனைத்த செண்டாடினாள்—பூச்— செண்டாடினாள்.
பன்னீரிலே நனைத்து இவ்விதமாக வே
பண்புடனிருபேருஞ் செண்டாடினார்— பூச்செண்டாடினார்.

வேறு செண்டு

(கைசஜா துடாலாதியாமைனஜாயுரேசையா வென்பதுபோல)

பல்லவி

பாரிஜாத செண்டாடினாள் பாரின்மீது கோதையே

அநுபல்லவி

ஆராவமுதன்ன காரார்குழலார்
ஓராயிரம்பெண்கள் நேராகப்பாடப் (பாரிஜாத)

சரணம்

தன்னிகரில்லாத நாரத ர்
மன்னுகீதமுஞ் செய்ய வே
மன்னுகீதமுஞ் செய்ய வே
நன்னயமாகவே முன்னாகவந்து நற்
பொன்னாரணிபூண்ட மன்னருடனே (பாரிஜாத)

வேறு செண்டு

(சாமியைக் காணமலிருப்பேனோ என்பதுபோல)

பல்லவி

செண்டாடினாள் கோதை சிறப்புடனே மலர்ப்
பந்தாடினாள் கோதை பாங்குடனே—பூச் [செண்]

அநுபல்லவி

வண்டார் மலர்க்குழல் மலைமகள் கலைமகள்
கண்டு கண்டுமனதிற் களிப்படையப் பூச் [செண்]

சரணங்கள்

செந்தாமரைமலர்த் திருக்கையினாலெடுத்து
மந்தாரமாலைகள் அசைந்திடவே—பூச் [செண்]

விந்தைமுகும் ஸ்ரீ வில்லிப்புத்தூரினில்
இந்திராதி தேவர்கள் இறைஞ்சிடவே-பூச் [செண்டு]

தாதியர் சூழவே சகலரும் புகழ்கின்ற
மாதவிப்பந்தலில் மனம்மகிழ்வாய்ப்-பூச் [செண்டு]

மன்னருடைய திரு மார்பிலுந் தோளிலும்
உன்னதமாக வீசி உவப்புடனே-பூச் [செண்]

ரங்கமன்னருமே நாணமடையக்கண்டு
சிங்காரமாகிய சிரிப்புடனே-பூச் [செண்]

வேறு செண்டு

(காமுனிவினவேயிபுடு என்பதுபோல)

பல்லவி

மல்லிகைப் பூச்செண்டாடினுள் எங்கள்
மாதாஜகதீஸ்வரி குட [மல்லிகை]

அநுபல்லவி

மல்லாண்ட திண்டோள் மணிவண்ணனுக்கென்று
பல்லாண்டுபாடிய பட்டர்பிரான் மாளிகையில் [மல்லிகை]

சரணங்கள்

நாரியர்களும் நாடவே வந்து
நாரதமுனிபாட வே
சீரியமணிமாலை திருமார்பிலேயாட
வேரிமலர்த்தாள் தொழுவோர் வினைகளெல்லாமோட [மல்லிகை]

சோலைக்கிளிபோலவே நல்ல
தோகைமயில்போல வே
நீலக்கொடிபோல நித்தியம் வளர்கோதை
ஞாலத்துள்ளோரெல்லாம் நன்ருகப்பார்த்திருக்க [மல்லிகை]

தகதகதகவென்னவே நல்ல
தங்கப்பணிகள் மின்ன வே
இகபாகதிதரும் எங்கள் குலதெய்வம்
திகழுங் குணனந்த ஸ்ரீரங்கமன்னருடன் [மல்லிகை]

## லாலி

மனையாளு மக்களுடன் வாழ்வு சதமென்றும்
எனையாளவேணுமென இங்குதித்த தாயே [லாலி]

மின்னுன தொருமுகிலில் விளங்குவதுபோல
மன்னரின் வலப்புறத்தில் மகிழ்கின்ற கோதாய் [லாலி]

குறுகாத பவக்கடலைக் குறுமுனிவன்போலப்
பருகாது வற்றுவிக்கும் பாமகல்யாணி [லாலி]

சிந்தைகுடி கொண்டுனது சேவடியிலெண்ணந்
தந்தருளிக் காத்திடாய் சத்வகுணமூர்த்தி [லாலி]

(லாலி வேறுவிதம்)

லாலி ஸ்ரீ கிருஷ்ணலாலி

அழகர்மதி தங்குமானே மன்னரின்
அகமலர் பொருந்துதே னே
பழவினையில் நொந்துளானே தவியாது
பாலிப்பாய் நன்றுதானே (லாலி ஸ்ரீ கிருஷ்ணலாலி)

வண்டுநிகர் நயனர்பரீ எனையாளும்
வடபத்திரசயனர்பா ரீ
விண்டுசித்தன்குமாரீ உனைப்பணியும்
மெய்ஞ்ஞானமருளுதாரீ (லாலி ஸ்ரீ கிருஷ்ணலாலி)

பலமுத்துநிறையுமாழி தன்னில் வரு
பங்கயமடைந்தைதோ ழி
உலகத்துளாழியூழி தன்னிலும்
உன் கருணை வாழி வாழி (லாலி ஸ்ரீ கிருஷ்ணலாலி)

---

## ஊசல்

அவனிபுகழ் வச்சிரத்தாற் கால்கணுட் டி
யழகான நல்வைர விட்டம்போட் டு
நவகிரணமா மணியாற் பலகைசேர்த் து
நாகரத்நமேற்பதித்த கொடுங்கை தாழ த
தவழ்ந்தசைமா ணிக்கச்சங் கிலிகள்பூட்டி ச்
சருவசன மோனமாயூசல் சேர்த் து

எவரும்புகழ் தென்னரங்காதிரூச ல்
எங்கள்திருக் கோதைநல்லீராதிரூச ல் [க]

கோமளமாம் நல்வயிரக் கால்கள்நாட்டி க்
குருவிந்தமாமணியால் விட்டம்போட்டு த்
தாமமிகு பொற்றகட்டாற் பலகை சேர்த்து த்
தாளமொடு நாற்பவளக் கொடுங்கைதா ழ
நேமமுடன் வாணியொரு வடந்தொட்டாட் ட
நித்யமிந்திராணி யொரு வடங்கொட்டாட்ட ப்
பூமிபுகழ் தென்னரங்காதிரூச ல்
பூங்கோதை நாயகியீராதிரூச ல் [உ]

தருக்கமுடன் வியாகரணங் கால்கள் நாட்டி ச்
சாரமுள்ள சோதிடமாம் விட்டம் போட்டு ப்
பெருக்கமுட னுபநிடதப் பலகை சேர்த்து ப்
பேதமில் நால்வேதச் சங்கிலிகள்பூட் டி
அருக்கன்மன மகிழ்வுடனோர் வடந்தொட்டாட் ட
அழகியவெண் மதியுமொரு வடந்தொட்டாட்ட த்
திருப்புகழ்சேர் தென்னரங்க ராதிரூச ல்
ஸ்ரீகோதைநாயகி யூராதிரூச ல் [ங]

சேடத்வபாரதந் திரியக்கால்கள் நாட்டி த்
திருவடிதாழ் ப்ரபத்தியெனும் விட்டம்போட் டு
நீடுபுகழன்பர்மனப் பலகைசேர்த் து
நித்தியகைங்கர்யச் சங்கிலிகள் பூட் டி
நாடியமெய்ஞ் ஞானமொருவடந் தொட்டாட் ட
நல்ல வனுஷ்டான மொருவடந் தொட்டாட்ட த்
தோடவிழ் தார்த்தென் னரங்காதி ரூச ல்
சோதி மிகுங்கோதை நல்லீராதி ரூச ல் [ச]

திருமொழியு மியற்பாவுங் கால்கள் நாட்டி த்
திருச்சந்த விருத்தமாம் விட்டம்போட் டு
மருவுதிரு வாய்மொழியாம் பலகை சேர்த் து
வளமிகுந்த திருப்பாவை கொடுங்கையாக ப்
பரவிய பல்லாண்டெனுஞ் சங்கிலிகள் பூட்டி ப்
பதின்மர் தமிழாற்செய்த வூசல்மீ தே

பிரியமுடன் ரங்கமன்னு ராடிரூச ல்
பெண்மயிலாங் கோதைநல்லீ ராடிரூச ல் (ரு)

பதினெட்டு ரகசியமாங் கால்கள்நாட்டி ப்
பாந்த ரகசிய மதனைவிட் டம்போட் டு
அதிகாசத் ரயக்கட்டுப் பலகைசேர்த் தே
ஆசார்யஹ் ருதயச் சங்கிலிகள்பூட் டி
மதிதருவார்த் தாமாலைக் கொடுங்கையா க
மங்களஞ்சே ரன்பர் மனமூசலா க
அதிலிருந்து ரங்கமன்னு ராடிரூச ல்
அழகுடனே கோதைநல்லீ ராடிரூச ல் (சு)

முத்துமிகும் சமலசாம் முகத்திலா ட
முல்லைமலர்ப் பூச்சரங்கள் குழலிலாட ச்
சுத்திதரு மணிவடங்கள் மார்பிலாட த்
துளவிலுறு மதுகரங்கள் புயத்திலா ட
அத்தருணம் வெண்கவரி மருங்கிலா ட
அரம்பையுரு வசிமுதலோர் நடனமா ட
முத்திதரும் கோதைநல்லீ ராடிரூச ல
முதுமறைசொல் மெய்ப்பொருளே யாடிரூச ல் (எ)

மருத்துளவின் வளையமது சிரத்திலா ட
மணிமகர குண்டலங்கள் செவியிலாட ப்
பருத்தமணி வடங்களெல்லாங் கழுத்திலாட ப்
பரிதிநிக ராழிவளை தோளிலாட த்

திருக்கமலை கவுஸ்துபமும் மார்பிலாட ச்
செய்யதிருப் பொன்னுடை யிடையிலா ட
விருப்பமுடன் ரங்கமன்னுராடிரூச ல்
விண்ணவர்கள் தொழுமரங்காடிரூசல் (அ)

வேறு ஊசல்

[கமலநயன வாசுதேவ என்பதுபோல]

பல்லவி

மாமலர்க்கோதை ஊசலாடின ள்
மன்னனுருடன் கூட (மாமலர்க்கோதை)

அநுபல்லவி

மன்னனுருடன் கூடப் பெண்கள்
நன்னயமுடன்பாட (மாமலர்க்கோதை)

சரணங்கள்

பாமாஜனங்களுக்கும் நெஞ்சினிற்
பத்திமிக வுண்டாகப்
பத்திமிகவுண்டாகப் புகழ்
எத்திசையிலுமேக (மாமலர்க்கோதை)

சாமளலதைபோன்ற விடையிற்
றங்கமேகலை யிலங்கத்
தங்கமே கலை யிலங்க—வளை
செங்கையில்மிகத் துலங்க (மாமலர்க்கோதை)

இருபுறத்திலுந் தேவமாதர்கள்
இணைக்கவரிகள் போட
இணைக்கவரிகள்-போட அன்பர்
துணைக்கண்களாலே நாட (மாமலர்க்கோதை)

செங்கதிரென வொளிகள் பாம்புந்
தீபங்கண்டிருள் நீங்கத்
தீபங்கண்டிருள் நீங்கத் தொண்டர்
பாபங்களும் பின்வாங்க (மாமலர்க்கோதை)

---

கப்பல்

வேதமெல்லாம் புகழுகின்ற—எங்கள்
வில்லிப்புத்தூர்ப் பட்டர்பிரான்
ஆதரிக்கும் பெண்ணுகத்—துளவில்
அவதரித்த திருக்கோதை
நீதிவளர் கல்யாணந்—தன்னில்
நேர்த்தியுடன் கொடுத்துவந்த
ஓதரிய வரிசையெல்லாங்—கப்பலா
யுரைத்திடுவேன் கேளுமையா

---

## துள்ளல்

தாதுசெறி பூமாலை நிறை தாழ்ந்தபந்தற்
றன்னில்வளரொளிமின்னு சிங்காசனத்திற்
கோதையொடுமன்னுரு மேவீற்றிருக்கக்
குயிலனைய மொழிமாதர் மங்களம்பாடத்
தாசரதிராமற்கும் சீதைக்குமன்னுள்
தந்தைசனகன்றந்த திந்தவிதமெனமே
காசினியிலுள்ளோர்க ளதிசயங்கொள்ளக்
கனகமயமானவெகு பாத்திரத்தொகையும்
வானவர்புகழ்ந்திடுஞ் செண்பகத்தோப்பு
மாலையிட்டாள்தோப்பு நரிப்பாரைத்தோப்பு
தேனெழுகுமலர்தங்கு திருமலைத்தோப்பு
செண்டலங்காரத் திருப்பெயர்த்தோப்பு
குட்டைதட்டித்தோப்பு சாலியன்றோப்பு
குன்றாதுவளர்நல்ல பெருமைகணிறைந்த
மட்டுவளர்கற்பகச் சோலையைநிகர்த்தே
வையகம்புகழ்கின்ற தோப்புவகையுடனே
குருமணிகடிறைதருந் திருமலைப்பேரி
குவலயங்கொண்டாடு கோதைப்பிராட்டி
பெரியகுளம்வாழைக் குளங்கங்கைகுளமும்
பிரியாதுபுனல்தங்கும் அமுதாகுளமுஞ்
சோளங்குளத்துடன் குளநிறைகளெல்லாந்
தொல்லுலகிலெல்லாரு மொன்றாய் நிறைந்தே
தாளுந்தடக்கையுங் கூப்பியேபணியுங்
தடமுடையகொடிதங்கு மாடமாளிகையும்
வானோங்கி வளர்கின்ற பதினாயிரந்தேர்
மங்குலைநிகர்த்தவெண் ணாயிரம்வேழம்
பானுவின்பரியொக்கு மாயிரங்குதிரை
பதிவானகாலாள்க ளையாயிரம்பேர்
ஆயிரம்பொன்பெற்ற பீதாம்பரங்கள்
அச்சுதர்க்கிச்சையா மாடையாபரணம
தூயவர்புகழ்ந்திடக் கோதைநல்லாட்குச்
சொல்லரிய வளமுற்ற நல்லபொற்சேலை
தலையலங்காரமா மாபாணவகையுஞ்

| | |
|---|---|
| சந்ததமு மொளிமின்னு | சந்திரமுருகுடனே |
| விலையுயர்ந்தெவரும் | வியப்புறும் வாளி |
| விமலவைடூரியக் | கமலசரவணையும் |
| ஒருகோடி பொன்பெற்ற | நவரத்னவோலை |
| உத்தமர்கொண்டாடு | நத்துமூக்குத்தி |
| இருகோடி பொன்பெற்ற | மாணிக்கமாலை |
| இப்புவியிலிணையற்ற | நற்பவளமாலை |
| மணிமாலை ஜெபமாலை | மகிழம்பூமாலை |
| வட்டவடிவாயிலகு | சந்திரஹாரங்கள் |
| வனமாலை பவன்மாலை | மாம்பிஞ்சுமாலை |
| மானிலத்தோர்புகழும் | வச்சிரப்பதக்கம் |
| அறுகாதவழிமின்னு | கிண்கிணிகளிட்டே |
| அதிகவிலையுள்ளதொரு | வயிரமேகலையுங் |
| குருவிந்தமணிதங்கு | தங்கவொட்டியாணங் |
| கோகனக மென்கையில் | மாகனகவளையும் |
| பலமணிகள் வைத்திழைத் | தெங்குமொழிதாவும் |
| பாடகந்தண்டையொடு | பாதச்சிலம்பு |
| கலகலவெனும் நல்ல | ரத்னச்சிலம்பு |
| காலுக்கிசைந்திலகு | காலாழிபீலி |
| இந்தவிதமாகவே | கோதைக்கு மேன்மேல் |
| இதயமகிழ்கொண்டு பெரி | யாழ்வார் கொடுக்கச் |
| சிந்தையிலிதைக்கண்டு | மன்னர்களிக்கத் |
| திருக்கோதை பந்தல்வந்து | சேர்ந்ததையகப்பல் |
| ஏலேலோ—ஏகரசம்—கோவிந்த | ஏலேலோபரமசுகம் |

---

## (எச்சரிகை)

| | |
|---|---|
| சேர்ந்தவராரும் புகழ் | ஸ்ரீரங்கநிவாசா |
| திருமார்பினி-லொருமாவளர் | பெருமான் (யச்சரிகை) |
| எங்கண்மாதவம்—பொங்கவேவரு | மங்களாகர மூர்த்தி |
| எந்நாளுமிம்-மன்னர்மகிழ் | பொன்னே (யச்சரிகை) |
| மதுவார்மலர்-விதுவார்பொழிற் | புதுவாபுரிதன்னில் |
| வந்தாயருள் தந்தாய் நிதம் | எந்தாய் (யச்சரிகை) |

பணவாளர-வணை மேவிய மணவாளனைச்-சேரும்
பாவையேதிருப்-பாவையேசொலும் பூவையே (யச்சரிகை)

வேறு எச்சரிகை

[சக்தி சகித கணபதிம் என்பதுபோல]

முத்தர் புகழும்-வித்தகா மூலமென்று-முன்பொரானை
சத்தமிடவு-மதுபடுந்துயர் தள்ளியருள்செய்-வள்ளலே
நத்தாரு-மத்தனே நன்மைசூடிகொள்-சித்தனே
இத்தலம் வந்தருள்-தென்னரங்கா சுத்தமுவந்தருள்-யச்சரிகை.

தஞ்சமென்ற பஞ்சவர்க் கஞ்சலென்று நூற்றுவர்முனந்
துஞ்சலென்று கருணைபுரியுந் தூயமாயநேயனே
அஞ்சாத வீரனே அருள்புரியுமுதாரனே
கஞ்சநிகர்த்திடு செஞ்சரண அஞ்சனவண்ணனே-யச்சரிகை.

திங்கள்வதன மங்கையே சங்குநேமிதங்குமாயன்
பங்கயநிகர் செங்கைபிடிக்கப் பவிஷுபெற்றிடுங்கோதையே
சிங்கார-வல்லியே தினமுமுன்பெயர் சொல்லியே
எங்கும் புகழ்ந்திடு மெங்களுக்கே மங்களந் தந்தருள்-யச்சரிகை.

வந்தனந்தினந்-தந்தனன் மாசிலாத கேசவன்மிகப்
புந்திமகிழ நந்தவனத்தின் போதில்வந்தருள் கோதையே
அந்தாமஞ்சூடியே யணிமல்லி வளநாடியே
நந்தனின் மைந்தனைச் சொந்தமதாச் சிந்தைசெய் சுந்தரி-யச்சரி.

விருத்தம்

மின்னனையா ரிவ்விதஞ்சொல் வதுசெவிகொண் டெழுந்து மனம் வியந்து கோதை, தன்னுடனே திருப்பள்ளி யறைக்கேகு மத்தருணந் தையலாளும், முன்னமதிற் புகுந்துகவா டம்புனைந்து தாள்கொள்ளுவி மூவாவேதம், பன்னுதிரு வரங்கனுமே பின் வந்து சொல்வதற்குப் பதில்சொல்வாளே.

[பிரணயகலக மென்கிற கதவுதிறக்கிற பாட்டு]

பூந்துளவிற் பிறந்த ஸ்ரீகோதைநாயகி
பொற்கதவைத் திறபெண்ணே மிக
நற்கனியிந்தாவென் கண்ணே (க)

பூங்கனியிந்தாவென்று ஈங்கிரவினில் வந்து
பொற்கதவைத் தொட்டவாரடி இங்கே
நிற்கிறவரை வந்துபாரடி (௨)

ஆரென்றுபாராமல் அதட்டிப் பேசாதே பெண்ணே
அருளும் ஸ்ரீரங்கமன்னர் நானடி இந்த
மருளும் உனக்குவந்ததேனடி (௩)

தேனூறு கூந்தலார் சேயிழைகள் வலையிற்
சிக்கினசிக்கெல்லாம் விட்டதோ-அவர்
சொக்குப்பொடியுமற்று விட்டதோ (௪)

சேயிழை யுன்னையல்லால் வேறொருத்தியைக் காணேன்
றெந்தன வார்த்தைகள் பேசுறாய்-முழுத்
தந்திரமாகச்சொல்லி வீசுறாய் (௫)

தந்திரமிவ்லையெங்கும் போகவில்லையென்றாற்
றூபசிக்கக் காரணம் ஏதோ-நான்
சரிவழக்குச் சொன்னால் வாதோ (௬)

வாதில்லை வானவரும் அசுரருஞ் சண்டைசெய்தார்
வழக்குத்தீர்க்கப்போனேன் பெண்ணே-இது
மாத்திரந்தானென்றன் கண்ணே [௭]

முடிந்தகுடுமியெல்லாம் அவிழ்ந்து புரள்வதென்ன
முழுப்பொய்யைச் சொல்லாதேயும் நேமா-இந்த
மோசஞ்செய்யமன தாமா [௮]

மோசமாடி செய்தார் ஓடிவந்ததினாலே
முடிமயிரவிழ்ந்தது மாதே-மிக
முரண்டு பண்ணாதேயிப் போதே [௯]

ஆச்சர்யமாகச் சொன்னீர் உம்மைப்போலெங்குமுண்டோ
அதரம் புண்ணாவதென்ன சொல்லும்-இந்த
ஆட்சேபத்துக்குச்சொல்லி வெல்லும் [௰]

சீதப்பிறைநுதலீ • கேளடி கோகுலத்திற்
றீங்குழ லூதிவந் தேனடி-அது
செய்பவே வந்திடு புண் தானடி [௰௧]

உம்முடைய மார்பினில் எவளுடைக்கண்மையோ
ஒட்டியிருப்பதைப் பாருமே-இதில்
உண்டான சந்தேகத்தைத் தீருமே [௧௨]

சித்தப்பிரமையுள்ளவள் நீயல்லால் வேறுண்டோ
ஸ்ரீவத்ஸமெனுமறுத் தானே-இதின்
செய்தி யுனக்குமுன் சொன்னேனே [௧௩]

மாதவனே யும்முடை மார்பினிலிருக்குமுந்நூல்
மஞ்சளாவதென்ன வோதும்-இது
மாத்திரஞ் சொல்லும் போதும் [௧௪]

பொன்னாலே முந்நூல் செய்து பூண்டுகொண்டாலதைப்
பூவையே மஞ்சளென்று சொன்னையே-இந்தப்
புவியோரென்சொல்வ ரென்னையே [௧௫]

அரையிலுடுத்தவஸ்திரம் அத்தனையும்மஞ்சள்
ஆவதென்ன சொல்லும் சுவாமி—நீர்
அதனாலல்லவோ மிகக் காமி [௧௬]

என்னரையிலுடுத்த வஸ்திரம் பீதாம்பரமென்
றெல்லோருஞ்சொல்வதை யெண்ணுவாய்—எதுக்
கித்தனையதிகாரம் பண்ணுவாய் [௧௭]

கேட்டதுக்கெல்லாஞ் சொன்னீர் பெண்புத்தியை மிரட்டக்
கெட்டிக்காரரன்றோ நீரே—இன்று
கேட்டல்லவோவறிந்தேன் நேரே [௧௮]

நேருத்தாஞ்சொன்னாற் சென்மப்பகை விளையும்
நிச்சயமின்னங்கொள்ள வில்லையே—இது
நிசவார்த்தைக்குக்கால மில்லையே [௧௯]

உள்ளத்தைச் சொன்னக்கால் உடம்பெரிச்சலுண்டோ
ஒகோயிதென்ன கோபம் சுவாமி—திரு
வுள்ளங்குளிரவேணும் சுவாமி [௨௰]

வாய்புளித்ததோமாங் காய் புளித்ததோவென்று
மரியாதை யில்லாமற் பேசுறாய்—வேறு
மாதரைக்காணேனென்றால் ஏசுறாய் [௨௧]

விஸ்தாரம்படிக்கிறீர் காணுதவிடத்தினில்
மேவினுலறிவேனே சுவாமி—ஜால
வித்தையையறிவேனே சுவாமி [உஉ]

பொறுத்துப்பொறுத்துப்பார்த்தேன் சொன்னதைச்சொல்லு
பொறுக்கவொண்ணுதினி நீயே—நான் [கின்றாய்
போகிறேன் தனித்திருப் பாயே [உங]

இத்தனை சொன்னதும் உபாசாரமாகக் காண்டு
என்மேற்கிருபை செய்வீர் சுவாமி—என்
றியம்பவே மகிழ்ந்தாரே சுவாமி [உச]

விருத்தம்

நிலத்தவாற்புதம் நெஞ்சிற் கொண்டிடப்
பலத்தவிவ்வூடலும் பாறிநீங்கவே
குலக்கொடி கோதையுங் குறுஞ்சிரிப்புடன்
வலக்கையாற்றிறந்தனள் மணிக்கவாடமே

---

## அவனிமகிழ்துங்க மன்னுராண்டாள பவனிவருதல்

விருத்தம்

கூவுகுயிற்குரலழகி கோதையொடு மன்றிரவிற கொஞ்சியின்ப
மேவிமறுநாளுதயத்தெழுந்திருந்து முறையனைத்தும் விளங்கச்
[செய்து
ஏவுறழ்கண்மலர்க்கோதைதன்னுடனே பலகலன்களிசையப்
[பூண்டு
மூவுலகோர்கண்டு தொழப்பவனிவந்தான் புதுவையினில் முகுந்
தன்றானே.

[வாசலிது வாசலிது வளர்ந்தேறும் வாசலிது என்பதுபோல]

பல்லவி

பவனிவந்தான் பவனிவந்தான்
பார்புகழுந் தென்னரங்கன் (பவனிவந்தான்)

அநுபல்லவி

பவனிவந்தான் தென்னரங்கன் பட்டர்பிரான் பரிந்தெடுத்து
நவநிதிபோல் வளர்த்த கோதை நாயகியாளோடுகூடி [பவனிவந்]

சரணங்கள்

இலகுமுடி மன்னவர்கள் இருபுறமுஞ்சூழ்ந்துவரப்
பலமணிகளிசைத்தமுத்துத் பல்லக்கினில் வீற்றிருந்து(பவனிவந்)

பட்டுக்குடைமுத்துக்குடை பலவிதமாஞ் சித்திரக்குடை
அட்டதிக்கினதிபதிகள் அன்புடனே ஏற்றிவரப் (பவனிவந்)

வாத்தியங்களொலிமுழங்க மண்ணிலுள்ளோர் விண்ணிலுள்
[ளோர்
நேர்த்தியாகப் பார்த்துவர நின்மலனுந் தென்னரங்கன் (பவனி)

காமரங்கள் வண்டிசைக்கும் கந்தமலர்க்குழல் மடவார்
சாமரங்களிரட்டவெகு சம்ப்ரமமாய்த் தென்னரங்கன்(பவனிவந்)

---

# ஆண்டாளும் ரெங்கமன்னரும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளியிருத்தல்

## விருத்தம்

சேதனர்களனைவருமே பணிந்துவாழ்த்தத் திருமல்லிநாடியுடன் பவனிவந்து, வேதியர்கோன் விண்டுசித்தன் பெண்ணுக்காக விதம் விதமாவழங்கு பரிசனைத்தும் பெற்றுப், போதன் முதலோர்கள் வெகுமானங்கொண்டு போற்றியவர்தம் மூலகிற் போனபின்பு, சீதானுங் கோதையுடன் அன்பர்வாழ்த்தத் தென்புதுவை மாநகரிலிருந்தான் மன்னே.

(இன்னாளுவெலகாதே வானிகுணம் என்பதுபோல)

## பல்லவி

எந்நாளும் மகிழ்ந்திருந்தான் சீரெங்கனுதன்
இன்பமுடன் றன்பதத்திலன்பர்கணிதம்பாவ (எந்நாளும்)

## அநுபல்லவி

மின்னார்குலதிலக மன்னாள்கோதையுடனே
மன்னாரெனும் பெயர் தன்னையடைந்து-எங்கள்
செகதீசன் அன்பர் அகநேசன்-என்றுங்
ககாசன் ஏகாசனத்திருக்க (எந்நாளும்)

சரணங்கள்

குன்றுவலிக் கஞ்சனை வென்றான்வெண்ணெயும் நெய்யும்
நன்றாகவே யெடுத்துத் தின்றகோமான் றுளா
வணிநீதன்—மறை துணிவேதன்—நிதம்
பணிபாதன் தென்புதுவைமாநகரில் (எங்கா)

ஏழிசைகளுந்தொனிக்கும் யாழினைத்தரித்துக்கொண்டு
வாழிமங்களங்களும்நற் றோழியர் சொல்ல—நல்ல
முனிவோர்கள்—மனங் கனிவாகத்—தொழுங்
கனயோக அந்தணர்பல்லாண்டு சொல்ல (எங்கா)

இவ்வுலகாவ்வுலக செவ்வுலகர்களுங் கூடித்
திவ்வியமறையுரைக்கப் பவ்வம்நிகர்ப்பப்—பொழிற்
பூவாரி—யிடு மாவாரி—நிறை
காவேரி சூழரங்கந்தனிற்போல (எங்கா)

[பரிவாகி மின்னை மன்னைப் பெரியாழ்வார் பூசித்தல்]

விருத்தம்

நீலமுகில்மேனி ரெங்கமன்னரையுங்குழவி ல்
மாலைசூடிக் கொடுத்த மாமாதுதன்னையு மே
வேலையுலகிலுள்ளோர்மெய்மகிழ்ந்து தாந்தொழ வே
சீலமிகுபட்டர்பிரான் றினம்பூசைசெய்தன னே

[நேநெட்லசகீந்துநே—அலவானீந்துவானிந்துநே என்பதுபோல]

பல்லவி

நன்றாகவாராதித்தான் நிதம்
குன்றாமறையோதித்தான்—மிக [நன்றாக]

சரணங்கள்

மாமாலைகள்சாத்தியே—ரங்க—மன்னர்பதம்போற்றியே —நல்ல
பாமாலைசெய்தேத்தியே—நல்ல—பாமாலை [நன்றாக]

மூலமறிந்தானையே—சொல்ல—முன்பாகவந்தானையே அதின்
சீலமுவந்தானையே—அதின்—சீலம் [நன்றாக]

பாடியடுத்தாளையே—திருப்—பாவைபடித்தாளையே .. மலர்
சூடிக்கொடுத்தாளையே—மலர்—சூடி [நன்றாக]

அந்தாமத் தன்பனையே—அனைவர்க்குமுன்பனையே யெனை
வந்தாளுமன்பனையே—யெனை—வந்தாளும் [நன்றாக]

அரங்கனையுற்றாளே—அடியேனைப்—பெற்றாளே நல்ல
இருங்கவிகற்றாளே—நல்ல—இருங்கவி [நன்றாக]

### விருத்தம்

மங்களமெங்கள் கோதை நாயகிக்கும் வடிவழகிய மன்னருக்கும்
மங்களம் புதுவையமரும் நாரணர்க்கும் மலர்மகள் பூமிநீளைக்கும்
மங்களம் விரசைவிண்டு சித்தருக்கும் மறுவிலாழ்வார்களாரியர்க்
கும்
மங்களந்தினமு முபயவிபூதி வயிணவர்களுக்கும் வாய்த்திடுமே

---

## மங்களம்

[நின்னுமருப முலகு நித்ய சுபமங்களம் என்பதுபோல]

### பல்லவி

மங்களங் கோதையாட்கும் மன்னருக்கு மங்களம்

### அநுபல்லவி

வங்கக்கடலுலகில் வளருந் திவ்யஸ்தலங்களுக்கும் [மங்களம்]

### சரணங்கள்

மலர்மாது பூமிகட்கும்
வடபத்திர சயனருக்கும் [மங்களம்]

பாரியாம் விரசையாட்கும்
பட்டர்பிரான் மாமுனிக்கும் [மங்களம்]

ஆழ்வாரா சாரியர்க்கும்
அஸ்மத்குரு பரம்பரைக்கும் [மங்களம்]

திருவேங்கட தாசன்சொல்லும்
செந்தமிழ்க்கீர்த் தனங்களுக்கும் [மங்களம்]

---

## வாழித்திருநாமம்

### விருத்தம்

வேயர்குலம்வாழி விண்டுசித்தன்வாழி விமலகுணஞ்சேர் விரசாதேவிவாழி, தூயபுகழ்க் கோதைமன்னர் பதங்கள்வாழி தொல்புதுவை நகரமரும் பெம்மான் வாழி, தேயமெலாம் புகழ்

விண்டு மதத்தி லோங்குந் திருமலைநல்லான் குலத்தி லுதித்தோர் வாழி, நேயமுடன கோதைகதை படிப்போர் கேட்போர் நிச்சயமா யெந்நாளும் வாழிதானே.

ஸ்ரீ கோதாகீர்த்தனமஞ்சரி முற்றுப்பெற்றது

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீராமஜெயம்.

## ஸ்ரீவில்லிபுத்தூரிலிருக்கும் ஸ்ரீ நல்லான் சக்கரவர்த்தி திருவேங்கிடாசாரியாரால் திருவாய் மலர்ந்தருளிய; ஸ்ரீ நம்மாழ்வார் மார்கழி உத்ஸவ வைபவத்தைப்பற்றி

## கண்ணிகள்.

இராகம் பூபாளம்

கண்ணிகள்

க. செந்தமிழ் மறைவளர் திருக்குருகூரிற்
திருவவதரித்தருள் நேமா
மந்தாரமெங்களைத் திருத்தி ஞானமருள்
வண்சட கோபனென்னும் நாமா.

உ. மார்கழி மாஸத்திலத்தியேன உத்ஸவ
மகிமைகொண்டருளுந் தேவா
சீர்புகழன்பொடு பாகவதர்கள் வந்து
திருவடி பணியும் பிரபாவா.

ந. அயர்வரும் அமரர்களதிபதியின் சர
ணாலயனே சட கோபா
நயமிகு மன்போடு முதலுத்ஸவந்தன்னி
லிராஜாங்கங் கொள்ளும் ரூபா.

ச. அடுத்த நாளில் நல்ல வேய்ங்குழலூதியே
ஆனிரைக்கூட்டத்தி னின்றாய்
கடக்கனின் றிரவினிற் கன்றுகொண்டு விளங்
கனியுதிர்த்த வடிவு கொண்டாய்.

ரு. ஆண்டாள் போலவே மூன்றாந்திருநாளில்
அழகிய திருக்கோலங் கொண்டாய்
தாண்டாவிளக்கென வீணைகொள் மோகினி
தூயவடிவினை கொண்டாய்.

சு. நான்காந்திருநாளிற் சோத்தியிற காளிய
நர்த்தனஞ் செய்திடும் முனியே
பாங்காக விரவினில் மாராமராஞ சாய்ந்திட
பகழியெய்த ஞானக் கனியே.

எ. பூவிலுள்ளோர் தொழ வைந்தாந் திருநாளிற்
புள்ளின வாயை நன்று கிழித்தாய்
தேவர்கள் பணிந்திட ராமனுருவெடுத்து
திடமாரீசனை யடித்தாய்.

அ. ஆர்வமொடு மறுநாளாதிமூல மென்ற
ஆனையைக் காத்தருள் நாதா
கார்நிறங் கொண்டருட் கிருஷ்ணன் வடிவெடுத்து
கையிற்கொண்ட நவநீதா.

கூ. எழாந்திருநாளிற் கோபிய ராடையை
யெடுத்தொளிக்குஞ்சேவை தந்தாய்
தாழ்வில்லாமலன்று தந்தப்பல்லாககினில்
தவிழ்ந்த கிருஷ்ணனுக வந்தாய்.

ய. மருவுமெட்டாந் திருநாளிற் கருடன் மன்னருடன்
மல்லி நாடியென நின்றாய்
அருகிலவந்த சோதை பூமலர் சூட்டிட
அடுத்தடுத்தே முன்பு சென்றாய்.

யக குவலயம் புகழவே ஒன்பதாந் திருநாளில்
கோவர்த்தனக்குடை பிடித்தாய்
நவமோகினியாகிப் பல்லக்கில தேவர்க்கு
நயமுடனமுதத்தை யளித்தாய்.

யஉ. மறுதினமாகிய உதஸவததழகிய
மணவாளனுகவே நின்றாய்
நறுமலரோன் ஞெழுமேசேஷ சயனனுகி
நாரணன் போன்றனை நனறாய்.

---

உ

## பூபாளம்

க. வகுள பூஷண வாரிசலோசன
வரதிந்த்ரிணிவாச எழுந்திரும்
நிகிலசுரோத்தம நித்யானந்த ரூபா
நிர்மலமூர்த்தியே எழுந்திரும்.

உ. திருத்தாம்ரவாணியில் திவ்ய தீர்த்தம் கொண்டு
ஸ்ரீ வயிஷ்ணவர் வந்து கூடினர்
மாதாபிதாவான வரகுணசீலனே
மஞ்சனம் செய்யவே எழுந்திரும்.

௩. ஆதிநாதருடபாதா விந்தத்தை
ஆராதனை செய்ய எழுந்திரும்
யாதுமில்காலத்துனன் முகனைத்தந்த
கோதிலை குணம்பாட எழுந்திரும்.

௪. பதிவாழ்வாரும் பந்திபந்தியாக
பாதம் பணியவந்தார் எழுந்திரும்
எதிபதிவரயோகியா முன முனிவரும்
ஏகமாய் தொழவந்தார் எழுந்திரும்.

௫. அக்யானமாகிய அந்தகாரங்களும்
அவனியில் நீங்கவே எழுந்திரும்
விக்யானமாகிய வேத தீபம்கொண்டு
மேதினி வாழவே எழுந்திரும்.

௬. பாஹ்யகுதிர்ஷ்டிகள் பகரும் படலங்கள்
பாரினில் நீங்கவே எழுந்திரும்
ஏகசக்ரதம் ஏரும் கதிரவன்போல்
எங்கும் விளங்கவே எழுந்திரும்.

௭. ஸத்சன ஹ்ருதயமாம் ஸாரசம்விகஸிக்க
ஸஹஸ்ரகிரணம்போலே எழுந்திரும்
துர்சன ஹ்ருதயமாம் சூரர்கள் அஞ்சிட
தூமகேதுபோலே எழுந்திரும்.

௮. கருவான குழியினில் கருத்திழியும் தொண்டர்
கவலையை நீக்க கருதியே

திருவிருத்தம்தன்னை செப்பி யடிமை செய்யும்
ஸ்ரீ சடகோபனே எழுந்திரும்.

௯. ஈசனுகியே எல்லா உலகளித்த
கேசவனடிதனில் பாசமாய்
காசினிவாழ்திரு வாசரியம் சொன்ன
நேசனே நிர்மல எழுந்திரும்.

௰. நந்தானரகத் தழுந்தாமல் நாரணன்
செந்தாமரைபாதம் சேரவே
அந்தாதி செப்பி யனைவரை வாழ்வித்த
எந்தை சடகோபா எழுந்திரும்.

௰௧. உருவாகி அருவாகி உளனுகி யிலனுகி
உலகுபடைத்துண்ட ஒருவனும்
மதுவார் தாழாய் முடிமாதவன் மகிழுரூர்
திருவாய் மொழிபாட எழுந்திரும.

௰௨. பங்கசாஸன லோல பக்தரக்ஷண சீல
யிங்கித ஸீகுமார எழுந்திரும்
நங்கைவா பலனளின வகுளமால
ஞானதேசிகனே எழுந்திரும்.

௰௩. காரிகுமாரனே கருணகாரனே
கல்யாண வேஷனே
வாரிஜபாதனே வாகுணுதனே.

௰௪. பதிலர் செந்தமிழ்களும் பலபல நூல்களும்
பாரில்காணுமல் மறைந்திட
துதிசெய்யும் ஞதமுனிக்கு
முன் சொல்லிய ஜோதி ஞானரூபா எழுந்திரும்.

௰௫ மதுரகவி புகழ்பதி யந்தனைபாடி
துதிசெய்யும் தொண்டர்கள் சூழவே
கதியளித்தவர்களை கழலிணை சேர்த்திட
காக்ஷி கொடுக்கவே எழுந்திரும்.

௰௬. திங்களுலாமாட ஸ்ரீ வாமங்கல
ஸ்ரீ வயிஷ்ணவருடன் கூடியே
மங்களமாய் வான மலையோகியும்
மலரடி தொழ வந்தார் எழுந்திரும்.

## பல்லவி

இராகம் காம்போதி ஆதிதாளம்

மங்களக் கல்யாண குண யெங்கள் ஞானதேசிகனை
யிங்கே யழைத்துவாரும் ரெங்கதாசரே.

## அநுபல்லவி

யெங்கும் பரிபூரணனை யேகவஸ்துவானவனை
நங்கைபருள் யெங்குமான ஞானவடிவானவனை—மங்கள.

## சரணங்கள்

ஆதியில் அனேகமவதாரங்கள் செய்து செகத்தில்
செத்ததைச் செத்ததைங்களும் திருந்தாமல்
நாதனைசடகோபனுக்கு நாலுவேதம் தமிழ் செய்து
நாதமுனிக்கருள் செய்யும் ஞானமுத்திரை கையானை—மங். க.

தென்னரங்கம் பொன்னடியான் செகத்தில் பிரசித்தனுபான்
மன்னன் காரிக்குலத்திநில் வந்த செல்வன்
தன்னடியார் வல்வினையைத் தவிர்த்து ரெட்சிக்குமவன்
சென்னல் முத்துபொழிந்துவரும் திருச்சங்கனித் துரையானை
—மங்கள உ.

தென்குருகைப்பெருமாள் தன் திருவடியை யநுதினமும்
அன்புடனே த்பானம் செய்யும் அந்தரெங்கம் யெங்கள்
குலதெய்வம் நீயே யெம்பெருமா ளாக்கும் நாதன்
அன்புடன் மதுரகவிக்கந்தரெங்கம் சொன்னவனை—மங்க. ந.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183512

---

பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸ்—1922.

81/5-2